உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 31 | விரோதிகிருது – பங்குனி – 10–4–72 | இதழ் 5

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

அறநிலையங்களும் - குடிமக்களும்

அறியாமை என்னும் அழுக்கு :

உலகத்தை ஆக்கி அளித்து ஒடுக்குகின்ற முழு முதற் பரம்பொருள் என்பது என்று இருக்கிறதோ அன்றே அதன் உடைமைகள்தாம் உலகில் உள்ள சொத்துக்கள் எல்லாம். பிறந்து வளர்ந்து வாழ்ந்து சிறக்கின்ற உயிர்க் கூட்டங்களும் இறைவனுடைய அடிமைகளே. இந்த உயிர்களில் படிந்துள்ள அழுக்கினை அகற்றிக் கொள்வதற்காகவே இவற்றிற்கு இறைவன் இந்த உலகத்தையும், உடலையும் அதனதன் தகுதிக் கேற்றவாறு கொடுத்துள்ளான். ஆனால் இவ்வுயிர்கள் அழுக்கை அகற்றி ஆண்டவனை அடைய வேண்டும் என்ற உணர்வே இல்லாமல், அழுக்கை அதிகப் படுத்திக் கொள்கின்றன.

'நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை"

என்ற திருக்குறட் கருத்தை மக்கள் அறிந்து உணர்வதாகவே தெரியவில்லை.

உழைத்துப் பிழைக்க வேண்டும் :

உலகில் உள்ள எல்லா உயிர்களும் உலகத்தைப் பயன் படுத்தி ஈடேற வேண்டும் என்பதும் உழைத்துப் பிழைக்க வேண்டும் என்பதும் இறைவன் திருவுள்ளம். ஆழமாகச் சிந்தித்தால் யானை முதல் எறும்பு ஈருகவுள்ள உயிர்கள் எல்லாம் உழைத்தே வாழ்கின்றன என்பது புலனுகும். இறைவனுடைய படைப்பு அப்படியிருந்தும், ஒருசிலர் உழைக்காமலே பிழைக்க எண்ணுகின்றனர். அதற்குக் காரணம் உயிர்களைப் பற்றியிருக்கும் அழுக்கின் வன்மையே யாகும். பிறப்பதற்கு முன்னரும், பிறந்த உடனேயும் தாயி னிடத்துப்பாலை ஊறச்செய்து அதைஊட்டி வளர்த்தும், சிறிது காலம் சென்ற பின் நம் அனைவர்க்கும் தாயாகிய பூமி தேவி யினிடத்து விளைகின்ற தான்யங்களை ஊட்டி வளர்த்தும் வருகின்ருன் இறைவன். எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டு மென்பதே இறைவன் திருவுள்ளம் ; இறைவன் கட்டளை. ஆனல் நம்மைப் பற்றியிருக்கின்ற அறியாமை என்னும் அழுக்கின் மிகுதிப் பாட்டின் காரணமாக உழைத்து நெறியாக வாழ வேண்டும் என்ற எண்ணம் குறைந்து விடுகிறது.

கடமையும் உரிமையும் :

நாட்டிற் பிறந்த அனைவருக்கும் நாட்டில் கிடைக்கின்ற வளங்களைப் பகிர்ந்து அனுபவிக்கும் உரிமை என்றைக்கும் உண்டு. அதே சமயத்தில் அவ்வளத்தின் பொருட்டு அயராது உழைக்க வேண்டிய கடமையும் அவர்கட்கு உண்டு. உழைக்கின்ற கடமை உணர்ச்சியை எந்த அளவு மேற்கொள் கின்றனரோ, அந்த அளவிற்குத்தான் அனுபவிக்கின்ற உரிமை யிலும் பங்கு பெற முடியும். இந்தத் தத்துவத்தை மக்கள் என்று உணர்கின்றனரோ அன்றுதான் நாட்டில் அமைதி நிலவ முடியும். கடமை உணர்ச்சி மக்களிடையே இருப்ப தாக நினைக்கக்கூட முடியவில்லை. அது வாய்க்கும் வரை கடமை உணர்ச்சியும், திறமையும் உள்ளவர்களிடத்து நிலம் முதலிய செல்வங்கள் சேர்ந்திருப்பது நன்மை பயக்கத் தக்கதே.

செல்வத்துப் பயனே ஈதல் :

செல்வத்திற்குத் தலைவராக - உரியவராக இருப்போர் "செல்வத்துப் பயனே ஈதல்" என்கிற அறம் உணர்ந்த திறம் உடையராயிருத்தல் வேண்டும். திறமைக் குறைவுடைய மக்களையும், சகோதர, சகோதரிகளாக எண்ணி அவர்களிடத்துள்ள உழைப்பினையும் பெற்று, அவர்களின் நலம் பேணுகின்ற அமைப்பில்தான் சொத்துக்கள் சேர்ந்துள்ளன. நாட்டுப் பற்றும், கடவுள் தமக்குச் செய்திருக்கின்ற உதவியை எண்ணிப் பார்க்கும் நெஞ்சமும், அறநெறி வழாமல் வாழவேண்டும் என்ற கடமையுணர்வும் உடைய மக்கள் பெருகுவார்களேயானால் சொத்துக்களோ, செல்வங்களோ ஓரிடத்தில் குவிந்திருக்கவேண்டிய அவசியம் இல்லை. அந்நிலை வரும்வரையும் பொறுத்திருந்து செயற்படுதலே நாட்டிற்கும் மக்கள் இனத்திற்கும் நலம் பயப்பதாகும்.

அறநிலையங்களும் அரசும் :

ஆலயங்கள் - மடாலயங்கள் - அறநிலையங்கள் இவைகளுக்கு அறவுணர்வு படைத்த மக்களும், மன்னர்களும் சொத்துக்களை நிரம்ப அளித்துள்ளனர். அந்தச் சொத்துக்களும், செல்வங்களும் மக்கள் நலத்திற்கே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இங்கே மக்கள் நலம் என்பது அவர்களுடைய உடலை வளர்ப்பதோடு உள்ளம் திருந்துவதற்கும், உணர்வை வளர்ப்பதற்கும் உதவுவதே ஆகும். கண்ணுக்குப் புலப்படக்கூடிய கை, கால்களைத் திருத்துகின்றது அரசு என்றால், கண்ணுக்குப் புலப்படாத கடவுளின் அருள் கொண்டு, கண்ணிற்குப் புலனாகாத கருத்தைத் திருத்துவன ஆலயங்களும், மடாலயங்களுமேயாகும். அந்த வகையில் அரசிற்குப் பெருந்துணையாக நிற்பன அறநிலையங்கள். சாதாரண மக்கள் ; ஏன் ? படித்துப் பட்டம் பெற்றவர்களும் கூட ஆலயங்கள், மடாலயங்கள் இவற்றால் நாட்டிற்கு என்ன பயன் என்று கேட்கவும் துணிகின்றார்கள். இது எது போன்றிருக்கிறது என்றால் அரசின் பெருந்துணையால் மருத்துவ வசதி, கல்வி வசதி, போக்குவரத்து வசதி, சாலை வசதி,

நீர்நிலை வசதி, ஒலி - ஒளி வசதி அனைத்தும் பெற்றும், 'அரசு என்ன சாதித்து விட்டது' என்று கேட்பதுபோலத்தான் இருக்கிறது. அறநிலையங்கள் நல்லவர்களை உருவாக்கு வதற்கு என்றே நிறுவப்பட்டன. தத்துவ உணர்வையும் சமய நம்பிக்கையையும் பரப்புவதால் நாட்டில் அல்லன அகன்று, நல்லன நாளும் பெருகும். அறநிலையங்கள் நல்ல முறையில் நடக்கின்றனவா என்று கண்காணிக்க வேண்டிய பொறுப்பு அரசிற்கு உண்டு. ஆனால் அரசே அவற்றில் முற்றிலும், முழுமையும் தலையிடுவது மதச்சார்பற்ற அரசின் கொள்கைக்கு முரண்பட்டதாகும். இக் கருத்துக்களை எல் லோரும் சிந்தித்து நல்லவகையில் செயல்பட வேண்டும்.

ஆதீனக் கோயில்களின் நிலை :

அறநிலையங்களுக்குரிய சொத்துக்களின் வருமானத்தைச் சமீபத்தில் தமிழக அரசு சட்டத்தின் மூலம் தள்ளுபடி செய் திருக்கிறது. நமது தருமை ஆதீனம் இச்சட்டத்தால் ஒரு லட்சம் கலம் நெல்லை இழப்பதன் மூலம் பதினாறு லட்சம் ரூபாயை இழக்கிறது. இது 5 அல்லது 6 ஆண்டுகளுக்குப் பாக்கியாகத் தங்கியுள்ள தொகையாகும். நமது ஆதீனக் கோயில்களைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 80 லட்சம் ரூபாயை இழக்க நேரிடுகிறது. இதுவும் 5 அல்லது 6 ஆண்டு களாகத் தங்கியுள்ள பாக்கியே. இவை இரண்டு, மூன்று தவணைகளில் சிறிது சிறிதாக 4, 5 ஆண்டுகளில் தள்ளினாலும் இந்நிறுவனங்களுக்குச் சுமை தெரியாது. ஒரே ஆண்டில், நடைமுதல் ஆண்டிற்கு வரவேண்டியதும் வராத நிலையில் இவ்வளவையும் திடீரென ஒரே அடியாகத் தள்ளிவிட வழி வகுப்பது ஆயிரக்கணக்கான நிலமில்லாத பணியாளர்களைக் கொண்டுள்ள இந்நிறுவனங்கள் அந்தப் பணியாளர்களைக் காப்பாற்ற இயலாமல் கைவிடுவதற்கு வழி வகுப்பதாகவே முடியும்.

ஆதீன - ஆலய குடிமக்கள் உறவு :

அறநிலையங்களுக்கும், குறிப்பாக நமது தருமை ஆதீனத் திற்கும், அதன் ஆலயங்களுக்கும் நிலத்தை நம்பி வாழும் உழவர்களைத் துன்புறுத்த வேண்டும் என்ற நோக்கம் சிறிதும்

இல்லே. அவர்களும் நலமாக வாழ்ந்து, அவர்களுடைய கடமையைச் சரிவர செய்து அறநிலேயங்களேயும் அதன் மூலம் நாட்டு மக்களேயும் நலமுறச் செய்ய வேண்டும் என்பதே நோக்கமாகும். பல்லாண்டுக் காலமாக - நானூறு ஆண்டுகளாக விவசாயக் குடிமக்களே இவ்வாதீனம் செம்மையாக வளர்த்து வருகிறது. பல ஆண்டுகளாகப் பாக்கி பற்றி, கெடுபிடி இல்லாமல் இருந்திருப்பதே இவற்றிற்குப் போதிய சான்ருகும். இன்றுவரை இவ்வாதீனம் விவசாயக் குடிமக்களே குத்தகைப் பாக்கிக்காக வெளியேற்ருமல் ஆதரித்து வளர்த்து தாயன்பு காட்டியும், தந்தையென அச்சுறுத்தியும் கடிதோச்சி மெல்ல எறிந்து வந்திருக்கிறது.

இன்றைய குருமுதல்வரின் திருவுள்ளம் :

மேலும், இப்பொழுது அருளாட்சி செய்துவரும் 26வது குருமகாசந்நிதானம் அவர்கள் ஞான பீடாதிபத்தியம் பெற்றவுடனேயே ஆதீனக் குடிமக்களே ஒவ்வொரு கிராமத்தவராக நேரில் வரவழைத்து உணவருத்தி, அவர்களுக்குள்ள பாக்கியின் உண்மையை நேரில் விசாரித்து, ஒன்றுக்குப் பாதியளவில் தள்ளுபடி செய்து, எஞ்சிய பாதியளவைப் பெற்று, என்றும் நல்லுணர்வுடன் நிலத்தை அனுபவித்துவர வேண்டும் என்று மூன்றுமாதத்திற்கு முன்னரே குறிப்பிட்டிருக்கிருர்கள். இதே கருத்தை, மாயூரம் நகரப் பெருமக்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு அளித்த வரவேற்பிலும் வலியுறுத்தியிருக்கிருர்கள். இவ்வறிவிப்பு செய்தித் தாட்களிலும் வெளிவந்துள்ளன. இவைகளேக் கொண்டு இவ்வாதீனத்துக் கொள்கை, விவசாயக் குடிமக்களேத் தன்னுடைய குழந்தைகளாகக் கருதிப் பாதுகாப்பது என்பது நன்கு புலனுகும். உண்மை இவ்வாறிருக்கும் போது, பொதுவாக அறநிலேயங்களுக்கும், சிறப்பாக இவ்வாதீனத்திற்கும் இதன் பரிபாலனத்தில் உள்ள கோயில்களுக்கும் எதிர்பாராத வகையில் பெரியதோர்இழப்பு நேரிட்டிருக்கிறது. இச்சமயத்தில்,

> ' ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லே
> போகாறு அகலாக் கடை '

என்ற திருவள்ளுவர் திருவாக்கையும், முன்னெரு காலத்

தில் இவ்வாதீனத்தில் சொல்லிய பாடல்களையும் சிந்தித்து அப்பாடல்கள் அறிவுறுத்தும் வழியில் செயற்படுவதே நமது கடமையாக அமைந்துள்ளது.

'தேசம் சிவாலயங்கள் சேர அலையொரு
மோசம் வந்ததையோ முதல்வனே - தேசத்து
மன்னை வெறுப்பேனே வருவினையை ஊட்டுவிக்கும்
உன்னை வெறுப்பேனே உரை'

'ஈசன் பலகினன் என்றக்கால் ஆலயத்துள்
மோசம் வந்ததென்று மொழியலாம் - ஈசனே
ஆக்குவதும் ஆக்கி அழிப்பதுவும் தானானல்
நோக்குவதென் யாம்பிறரை நொந்து:'

(392ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வழங்கி தமிழ்கற்கும் கல்லூரி மாணவர்க்குப் பொற்காசுகளும் பாராட்டும் நல்கித் தமிழ்வளர்ச்சிக்கு அடிப்படைத் தொண்டு புரிந்து வருவது தருமையாதீனம். சென்னை சமயப்பிரசார நிலையத்தில் ஓய்வு நேரத்தில் தமிழ்ப் புலவர் பட்டம்பெறத் தமிழ்மொழி கற்கும் மாலை நேரக் கல்லூரியை அமைத்து 60 புலவர்களை நாட்டிற்கு அளித்து தமிழைப் பரப்பும் திருப்பணி செய்து வருவது தருமையாதீனம். திருக்குவளையில் உயர்நிலைப் பள்ளிக்கு நீண்டகாலப் பகுதிக்கு நிலம் வழங்கி கல்விப் பணிக்கு உதவியிருக்கின்றது தருமையாதீனம்; இவ்வாறு சொல்லிக்கொண்டே போகலாம்.

"விரிப்பின் அகலும் தொகுப்பின் எஞ்சும்" என்ற சங்கப் புலவன் திருமொழிதான் நினைவில் எழுகின்றது. சைவத் திரு மடங்களாலும், காமகோடி பீடத்தாலும், தமிழ் இலக்கியம் தக்க வளர்ச்சியும் ஏற்றமும் பெற்று வளர்ந்து வருகிறது.

மௌனமாக, அடக்கமாக, ஆரவாரம் இன்றிக் காலத்திற் கேற்ற முறையில், தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட சமய, இலக்கிய தொண்டுகளைச் செய்துவரும் தமிழகத்து அறநிலையங்களின் தன்னலமற்ற பணிகளை, குறிப்பாகத் தருமையாதீனத்தின் தெய்வத் தமிழ்ப்பணிகளை ஓரிடத்தில் இருந்து, நிதானமாகச் சிந்தித்தல் வேண்டும். அந்தச் சிந்தனை காட்டும் அற்புத ஒளியில் தமிழ் பெற்ற பெற்றுவரும் - லாபமும் தெற்றென விளங்கும் ஆம்; சிந்தனைதானே அறிவின் தெளிவைக்காட்டி வழிநடத்தும் கைவிளக்கு!

"வாய்ப்பேச்சால் தமிழ் வளர்ச்சி பெறுவதில்லை!
வஞ்சகத்தால் வாய்மைநெறி அழிவதில்லை!
தாய்த்தமிழை அறநிலையம் காக்கும் சேவை
தமிழ்நாட்டு வரலாற்றில் மறைவதில்லை!

ஆடூர் பாக்கிய - பஞ்சுக்காரச் செட்டியார்கள் நிகழ்த்திய
குரு வழிபாட்டின்போது

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் அருளிய

ஆசியுரை

" வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை ஏற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே "

— திருத்தாண்டகம்.

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்தும்விடம் தெரிந்தி டாமல்
தாரணிஅன் பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன்; எங்கோன்
காரணியும் நெடியபொழில் கமலை வேந்தன்,
கருணைமழை பொழியுமிரு கடைக்க ணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமனிரு சரணமலர் பரவி வாழ்வாம்.

— குருமுதல்வர் வாழ்த்து.

" அடியனேன் அறிவிலாமை கண்டுமென் அடிமை வேண்டிப்
படிமிசைக் குருவாய் வந்து பவவினை நீக்கி யாண்டு
கடிபொழில் தருமை மேவிக் கயிலையைக் கண்டு வந்து
விடிவெள்ளி விழவும் கொண்ட விமலசற் குருவே போற்றி."

அன்பர்களே !

தருமையாதீனம் இன்றைக்கு 450 ஆண்டுகட்கு முன் இவ் வில்வாரண்ய க்ஷேத்திரமாகிய தருமபுரத்தில் நமது ஆதிபரமாசாரியராகிய ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகளால் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வருள் வரலாறு பலருக்குத் தெரியும். சிலருக்குத் தெரியாது. உலகியலில் வாழும் நமக்கு நம்மைப்பற்றிச் சரியாக உணர்ந்துகொள்ள நேரமில்லை. உணர்த்தவும் ஆள் இல்லை.

'உணர்த்தில் உணர்வேன் உணர்த்தாயேல் நாயேன்
களைத்தும் உணரும்வகை காணேன்'

என நம் ஆதி குருமூர்த்திகள் இதனை அருமையாக எடுத்துக் கூறியுள்ளார்கள். வழிகாட்டிகள் நம்மிடையே பலர் இல்லை. இருந்தால் ஆண்டவனைக் காணுதல் என்பது எளிதாக இருக்கும். இதனை, குருஞானசம்பந்தப் பெருமான்,

" என்னால் உனை அடைய வல்லேன் எனில்இடரில்
இந்நா ளளவும் இருப்பேனோ "

என்று விளக்குகிறார்கள். இதனையே திருச்சிராப்பள்ளித் தேவாரத்துள்ளும் 'சென்றடையாத திருவுடையானை' எனத் திருஞானசம்பந்தர் குறிப்பிடுகிறார். உலகியலுள்ளும் தாயே பால் கொடுத்தாலன்றிக் குழந்தை பால்பெறுதல் இல்லை; தொடர்ந்து நின்ற தாயானவன் பரம்பொருள்.

ஊனை வளர்ப்பவர் தாய், தந்தையர்; உயிர் வளர்க்க குரு! இதனையே 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' எனவும் 'மாதா பிதா குரு தெய்வம்' எனவும் நம்முன்னோர் குறித்தனர். ஆரம்பப்பள்ளி ஆசிரியர் உதவியின்றி எம். ஏ., ஆசிரியரைப் பற்ற முடியாது. முதலில் தாய்; தாய்வழி தந்தை; தந்தை வழி குரு; குருவழி தெய்வம் என்பதே நம்முன்னோர் கண்ட அனுபவத்திற்கும் ஒத்த முறை.

நீர்வளமில்லாத இடத்திற்கு அரசே முயன்று நீர்வளத்தை ஆக்கித்தருவது போல, அடியார்கள் தேவையறிந்து 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து' இறைவன் தானே சென்று அருளுகிறான். மக்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் நாட்டுக்குப் பயன்படவேண்டும் என்ற எண்ணம் வேண்டும். இருந்தால் விண்ணுலகத்தின் வளவாழ்வை மண்ணுலகத்தில் காணலாம்.

'அண்டத்தில் உள்ளதே பிண்டத்தில் வரும்' என்பது பழமொழி, அம்மை இல்லை எனில் அருள் இல்லை; அம்மை அருளே வடிவானவள். இதனைச் சேக்கிழார் பெருமான் ஆனாய நாயனார் வரலாற்றில்,

" ஆனாயர் குழலோசை கேட்டருளி அருட்கருணை
தானாய திருவுள்ளம் உடைய தவவல்லி "

எனக்குறிப்பிடுவர். உலகியல் காரியங்களும் சக்தியின்வழி நடை பெறுவதை எங்கும் காண்கிறோம். சம்ஹார காலங்களில் இறைவன் சக்தியோடு செல்லவில்லை. இராமன் சீதையுடன் இருந்திருந்தால் இராவணவதம் நடந்திருக்காது. அருள் உள்ளமுடையவர்கள் பெண்கள். இதனால்தான் நீதிமன்றங்களில் பெண்கள் கூடாது என ஆங்கிலேயர் கூறுகின்றனர். பெண்மையை அருளாக வைத்துப் பெருமை கொடுத்திருப்பது நமது சமயம். ஆண்டவன் எல்லாவற்றிலும் உடனாய் இருந்து நம்மை வளர்க்கிறான். ஆமை, மீன் முதலியவற்றின் முட்டைகளைப் பக்குவப் படுத்துவதே தாயின் கருணைதான். சூரியன் தாமரைப் போதினை மலர வைக்கிறான். தாமரை மொக்கு அரும்பி நாளும் வளர்வதற்கும் சூரியனின் கருணையே காரணமாகிறது. அது போல, உயிர்களை நாளும் நாளும் வளர்ப்பதும், அவை பக்குவம் பெற்ற நிலையில் அவற்றிற்குப் பேரருள் நல்குவதும் இறைவனுடைய பெருங்கருணையேயாகும். யாவும் திருவருளால்தான் நிகழ்கின்றன என நாம் உணரவேண்டும்.

ஆயினும் அத்திருவருள் எங்கே எப்படி வெளிப்படும் என அறிதல் நமக்கு இயலாது. காசியில் சென்று நம் கயிலைக் குருமணி பரிபூரணம் அடைந்தமையை எண்ணும்போது,

" இன்னவினை இன்னதலத் தின்னபொழு தின்னபடி
இன்னதனால் எய்தும் என அறிந்தே - அன்னவினை
அன்னதலத் தன்னபொழு தன்னபடி அன்னதனால்
பின்னமறக் கூட்டும் பிரான் "

என்ற சிவபோக சாரத்திருப்பாட்டு நம்நெஞ்சில் எழுகிறது. உயிரைக் காசியம்பதியிலே பிரித்து அவர்கள் பெருமையை விளக்கிக் காட்டினான் என நாம் நினைப்பதுண்டு. இப்படித் திருவருள் வெளிப்பாட்டை விளக்க எவ்வளவோ உதாரணம் கூறலாம். உங்கள் பாடசாலையில் பயின்ற ஒருவர் ஆதீனத்தின் குருவாக வந்திருப்பதே ஒரு திருவருள் வெளிப்பாடுதானே!

உயிர்களுக்கு அன்பு வேண்டும். அதிலும் விவேகம் கலந்த அன்புவேண்டும். ஈசனுக்கு அன்பிலார், அடியவர்க்கும், எவ்வுயிர்க்கும், தனக்கும் அன்பில்லாதவராவர் என்பது சரித்திர வாக்கு. நமது அறிவு குறையுடையது. அறம் என்பது மனத்தில் மாசற்றிருப்பது. 'அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயன்' என்பர் நன்னூல் ஆசிரியர். இதனையே சதுர்வித புருஷார்த்தம் என்பர் வடமொழியாளர். திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள், மக்கள் இந்நான்கில் முதலும் கடையும் விடுத்து இடையுள்ளதையே பெற விரும்புகின்றனர் என்பர்.

இன்பத்தை அடையப் பொருளைப் பெறவேண்டும். பொருளை ஈட்ட முதல்வேண்டும்; முதல்தான் அறம். முதலைவைத்துக் கடையில் (வீட்டில்) வணிகம் செய்யவேண்டும். இதனை விடுத்து 'நான் யார் என் உள்ளம் யார்' என நினைக்க மறக்கிறோம். இதனை நினைவூட்டவே ஞானபீடங்கள்; ஆதீனங்கள் முதலியன இருக்கின்றன.

சமயாசாரியர் நால்வரும் நான்குதிசையில் நமக்கு வழிகாட்டினர். இவர்களை இறைவன் பாலைக் கொடுத்தும் சூலை கொடுத்தும், ஓலை கொடுத்தும், காலைக் கொடுத்தும் ஆண்டுகொண்டருளினன். நம்முடைய தரத்திற்குத் தகவே இறைவன் ஆட்கொள்வன். யாரிடத்திலிருந்து அறிவு கிடைத்தாலும் அதனைக் குருவருளாகக் காணவேண்டும்.

இறை எண்ணமே சமயத்துறையில் நாம் பெறும் ஊதியம். இறைவனே நம்மை நடத்திப் போகிறான். நல்ல எண்ணமிருந்தால் நாமும் உய்ந்து மற்றவர்களையும் உய்விக்கலாம்.

நல்ல ஆசிரியர் கிடைப்பதும், நல்ல மாணவர்கள் கிடைப்பதும் அருமை. சீடர்களை, கற்பூரம், கரி, கதலி முதலிய மூன்று பொருள்களைக் காட்டி விளக்குவர். இந்த பாக்கியத்துச் செட்டியார்கள் நல்ல சீடர்கள்.

இம்மடம் எல்லார்க்கும் உரியது. சைவ நெறியாளர் ஒன்றுபடவேண்டும். ஏனையோரையும் திருத்தி ஆட்கொள்ளவேண்டுவது நம் கடமை. ஆசாரியனின் விழாவிற்கு நீங்களெல்லாம் வரவேண்டும். வைகாசி மாதத்து அமரபட்ச சஷ்டி திதியில் குருபூசை நிகழும். மறுநாள் பேசும்குருவின் பட்டணப்பிரவேசம் நிகழும். இவ்விரண்டுநாளும் வந்திருந்து ஆசாரிய மூர்த்திகளை நினைந்து வழிபடவேண்டும். ஆசாரியர் விழாவிலும் ஆசாரியரால் பூசிக்கப்பெற்ற ஆன்மார்த்த மூர்த்தியாகிய சொக்கநாதப் பெருமானின் ஆவணிமூல விழாவிலும் பங்கு கொள்ளவேண்டும். பிறவியின் பயனைப் பெறுதற்குரியதொண்டு செய்து உய்யவேண்டும்.

நல்ல உணர்வு வரும்போது நல்லகாலம் வருகிறது என்பது பொருள். அருகில் உள்ளவர்கள் குருவாரந்தோறும் வந்து வழிபடலாம். இயன்றவர் வரலாம். இயலாதவர், இயன்றவகை இந்நாட்களில் தத்தம் இருப்பிடத்திலிருந்து வழிபாடு நிகழ்த்தலாம். இந்நாளில் அன்போடும், பக்தியோடும் குருவழிபாடு நிகழ்த்தியவர்கள் பக்திப் பரவசத்தைப் பாராட்டுகிறோம். இனி எந்நாளும் இந்நிலை நீடிக்க ஆதி குருமூர்த்திகள் கருத்திலும் கரத்திலும் இருந்த சொக்கநாதப் பெருமானைச் சிந்திக்கிறோம்.

உ

சிவமயம்

புத்தாண்டு வாழ்த்து

புலவர். திரு. இரா. செல்வக்கணபதி

அரிதான நல்வளங்கள் பூமி அன்னை
ஆயிரங்கள் தன்மாட்டுச் சேர்த்து வைத்து
பெரிதான நல்லறிவை மக்கட் கீந்து
பிழைத்திடுக உழைத்தென்று அறிவு றுத்தாள்;
சரியாக உழைக்காமல் மக்கள் எல்லாம்
சமதரும முழக்கமிட்டுச் சரியும் வேளை
பரிதாபி புத்தாண்டே வருகின் றாய்நீ
பார்மீது நின்னாட்சி விளைப்ப தென்னே?

புல்லறிவின் திறமகற்று : மக்கள் வாழ்வில்
புகுந்துள்ள பொல்லாங்கின் வேரை வீழ்த்து;
நல்லறிவின் திறத்தாலே உழைத்து ஈட்டி
நலம்பூத்து வாழ்கின்ற வகைமை காட்டு;
செல்வங்கள்; நல்வாய்ப்பு; சிறந்த சிந்தை
செயலறியா நிலைமாற்றம் யாவும் நீக்கி
மெல்லமெல்லத் தமிழ்மக்கள்வாழ்க்கை தன்னை
மேலோங்கச் செய்திடுவாய், வாழ்த்து கின்றோம்!

மழைவளங்கள் சுரந்திடுக; மக்கள் வாழ்வில்
மகத்தான திருப்பங்கள் விளைக; நாளும்
பிழைசெய்தே வாழ்கின்ற சிலரை உந்தன்
பேரருளால் வழிப்படுத்தி உய்தி நல்க;
கழைக்கரும்பும் செந்நெல்லும் ஓங்க நெஞ்சில்
களிப்பெல்லாம் விளைந்திடுக; தாயே உந்தன்
விழைவுக்குள் மக்களினம் நலங்கள் பெற்று
வென்றிடுக உன்பெருமை வெல்க வாழ்க!

தருமபுர ஆதீனத்தால் தமிழுக்குக் கிடைத்துள்ள 'லாபங்'கள்!

செஞ்சொற்கொண்டல், புலவர்

திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling.,

பத்திரிகைக் குறிப்பு :

'தருமபுரம் ஆதீனத்தால் தமிழுக்கு என்ன லாபம்' என்ற தலைப்பில் நாத்திகம் செய்தித்தாளில் 7—4—72 ல் ஒரு செய்தி வெளியிட்டிருப்பதைக் கண்டேன்; அதிர்ச்சி அடைந்தேன். இந்திய கம்யூனிஸ்ட்கட்சி உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் பேசியதாக அக்குறிப்பு வெளியாகியிருந்தது

'தருமபுரம் ஆதீனம் என்பது தமிழ் வளர்ச்சிக்காக உள்ளது என்கிறார்கள்; அந்த ஆதீனத்திற்கு 60 ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த ஆதீனத்தால் தமிழுக்கு என்ன லாபம்? அவர்களால் தமிழ் என்ன வளர்ந்திருக்கிறது?' என்று மேலும் அந்தக் குறிப்பு விரிந்திருக்கக்கண்டேன்.

'பெற்றுவளர்த்த அன்னையைப் பார்த்து உன்னால் எனக்கு என்ன லாபம்? என்று கேட்கும் மகனைப் போல நண்பர் இவ்வாறு வினவியிருக்கின்றார். ஆனால் ஆதீனத்திற்கு ஏறத்தாழ 4000 ஏக்கர் நிலமே உள்ளது என்பதை அவர் அறியார் போலும்?

வினாவின் அடிப்படையில் :

தொண்டு செய்துவரும் தூயமனத்தவரை நோக்கிக் கண்ணை மூடிக்கொண்டு உம்மால் எங்களுக்கு என்ன விளைந்து விட்டது, என்று கேள்விகேட்பதுபோல இவ்வாறு கேட்டிருக்கிறார், அரசியல் ஒன்றையே கூர்ந்து நோக்கி விமரிசிப்பவர் ஒருவர், தமிழ் உலகின் பழைய நிலை, இன்றைய நிலை, இவற்றில் ஆதீனங்களின் அரும்பணிகள், குறிப்பாகத் தருமை ஆதீனத்தின் தொண்டு இவற்றை அறிவதற்குக் கொஞ்சம் இலக்கியப் பார்வை வேண்டும்; நடுநிலை நோக்கு வேண்டும்! விருப்பு வெறுப்பற்ற விமரிசனப்போக்கு வேண்டும்; திறனாய்வு என்று இதற்குத்தான் பெயர்; வாயில் வந்ததைப் பேசி, ஏதாவது ஏடுகளில் வெளிவந்துவிடும் வரிகளில் திறனாய்வுப் போக்கு இல்லாதது வியப்பில்லைதான்.

மக்கள் மனம் :

இருபது ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாடு இருந்த நிலைக்கும் இன்று வளர்ந்துவிட்ட தமிழ்நாடு விளங்கும் நிலைக்கும் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வேறுபாடு இருக்கும்போது, ' இந்த அரசால் நமக்கு என்ன லாபம் ' என்று சிந்தனையின்றி — ஆராயாமல் — நிதான புத்தி இல்லால் — அவசரப்பட்டுக் கேட்டுவிடும்மக்களைக் கொண்டுள்ள இன்றைய நாட்டில், தருமபுர ஆதீனத்தால் தமிழுக்கு என்னலாபம் என்பனபோன்ற வினக்கள் எழுவது வியப்பிற்குரியவை இல்லைதான். இவற்றிற்கு விடையளிக்கக்கூட வேண்டாம். ஆனாலும் தமிழ் உலகைக் கூர்ந்து நோக்கியவாறு, கடந்தகால, நிகழ்கால, எதிர்காலக் கணிப்புக்களில் ஈடுபட்ட படித் தமிழ்த்துறையில் தொண்டு செய்யும் எம்போல்வாரின் நெஞ்சப்புலத்திலே ஓர் இடியாக இந்த வினா விழுகிறது; வளர்ந்துவரும் தமிழ்உலகில் விளைந்துவரும் புதுமைகளையும் இலக்கியப் படைப்புக்களையும் கண்டு பாராட்டத் தெரியாவிட்டாலும் பழிக்காமலாவது இருக்கக்கூடாதா ?

" நல்லதுசெய்தல்ஆற்றிராயினும் அல்லதுசெய்தல்ஓம்புமின் " என்பது புறநானூற்றுப் புலவன் வாய்மைநெறி ஆயிற்றே; ' நல்லது செய்யத் தெரியாவிட்டால் சும்மா இருக்கலாகாதா ? தீயது செய்யத்தான் வேண்டுமா ' என்று அறிவுலகிற்குச் சங்க காலப் புலவன் உரைத்த இடித்துரையை இன்றும் ஒருசிலர்க்குச் சுட்டிக்காட்டத்தான் வேண்டியிருக்கிறது.

நூல் வெளியீடு :

தருமையாதீனத் தமிழ்ப் பண்ணையிலிருந்து தரமான - அறிவார்ந்த - சிந்தனையை வளர்க்கக்கூடிய - சமயநெறிக்கும் கடவுள் நெறி உணர்வுக்கும் புறம்போகாத இலக்கியப் படைப்புக்கள் ஏறத்தாழ அறுநூறுக்குமேல் தமிழகத்தில் உலவிக் கற்றறிந்தார்க்கு இன்பம் ஊட்டி வருகின்றனவே ? இது தமிழ்ப்பணி இல்லையா ? தமிழுக்குக் கிடைத்த லாபம் இல்லையா ?

திருக்குறள் உரைவளம் :

திருக்குறளுக்கு, முதன் முதலாக எல்லா உரைகளையும் தொகுத்துப் பதிப்பித்து உலகம் பாராட்டத்தக்க உரைவளப் பதிப்பை,முதுபெரும்புலவர் மகாவித்துவான் திரு ச. தண்டபாணி தேசிகர் அவர்களைக்கொண்டு தருமை ஆதீனந்தான் வெளியிட்டது. தமிழ்வல்ல உலகப் பேரறிஞர்கள் பாராட்டுப்பெற்ற அற்புதமான தமிழ்த்தொண்டு. இதன்பின் இந்த உரைவளப் பதிப்பைப் பின்பற்றியே பல்வேறு பதிப்புக்கள் வெளிவந்துள்ளன என்ற உண்மை ஆராய்ச்சி உணர்வும் தமிழ்ப் புலமையும் பெற்றவர்களுக்குப் புரியும்.

திருமுறை உரை வெளியீடு :

தமிழ் அகத்தியர் காலந்தொடங்கி இன்றுவரை கடவுள் உணர்வு குழைந்த திருமொழி; கடவுள் மணம் கமழும் தெய்விகத் திருநூல்கள் செறிந்த பெருமொழி; 'ஒரு மெய்யுணர்வு மொழி' என்று உலகப் பேரறிஞர் உரைத்து ஏத்தும் ஒரு மொழி; உயர்தனிச் செம்மொழி; பன்னிரு திருமுறைகளுக்கும் நாலாயிரப் பிரபந்த வியாக்கியானப் போக்கில் உரைத்திட்டம் ஒன்று வகுத்து, ஒன்பதாம் திருமுறை வரை வெளியிட்டுள்ளது தருமையாதீனம். பத்தாந் திருமுறை - திருமூலர் 'தெய்வத்தமிழ் அச்சாகி வருகிறது; இதனைத் தமிழுக்கு விளைந்த பெரும்பேறென்று கூறாமல் வேறு என்ன பேரிட்டழைப்பது? சட்டமன்றத்தில் இவற்றை எல்லாம் எண்ணாமல் பேசுவது முறையாகுமா ?

ஞானசம்பந்தம் - தமிழ் மாத இதழ் :

தமிழ் இலக்கியம், இலக்கணம், சமயம் முதலிய பல்வேறு கட்டுரைகளை - அறிஞர் கருத்தோவியங்களைத் தாங்கித் திங்கள் தோறும் தருமையாதீனத் தடாகத்திலிருந்து மலர்ந்துவருகிறது "ஞானசம்பந்தம்" என்ற ஞானத் திருமலர். இதில் வரும் கட்டுரைகள் நூல்வடிவம் பெற்றுத் தமிழ் உலகில் உலவிவருகின்றன. இலக்கிய, சமய ஏடுகளில் தனியிடம்பெற்றுள்ளது இம்மாத இதழ். இது தமிழ்த் தொண்டு ஆகாதா? தமிழ்மக்கள் 'எண்ணித் துணிதல் வேண்டும்'; 'எண்ணாது துணிவது' இடர் தருவதோடு அறிவுடையார் நகைப்பிற்கும் ஏதுவாகும் அன்றோ?

இசைத்தமிழ்ப் பணியும் - ஒழுக்க நெறியும் :

செந்தமிழ் வேதமாகிய பன்னிரு திருமுறைப் பாடல்கள் பலவற்றைத் தக்க இசைப்பேரறிஞர்களைவிட்டு இசைத் தட்டுக்களாக்கி வெளியிட்டு விழுப்புகழ் பெற்றுள்ளது தருமையாதீனம். மக்களுக்கு ஒழுக்கநெறியாகிய அறநெறியைக் கற்பிக்கும் புராண இலக்கியங்கள், இதிகாச இலக்கியங்கள் பற்றிய ஆய்வு நூல்களை வெளியிட்டு நற்புகழ் பெற்றது தருமையாதீனம்.

தருமை தந்த தவச்செல்வங்கள் :

தருமையாதீனத்திலிருந்து தமிழ் கற்று, திருவண்ணாமலையாதீனத்தில் குன்றக்குடி மடத்தின் தலைவராகி, இன்று தமிழ் கூறு நல் உலகின் எட்டிலும் எழுத்திலும் தனிச்சிறப்புப் பெற்று தமிழக அரசுச் சட்டமன்ற மேலவையிலே அழகுத் தமிழை, தெய்வத் தமிழை, அருள் மணக்கும்படிப் பேசும் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் தருமையாதீனத்தால் தமிழுக்குக் கிடைத்த லாபம்

சிறந்த செந்தமிழ்ப் புலவராய், இசையோடு பாடும் திறனும் பெற்றுத் தமிழகத்தின் சிற்றூர் பேரூர் தோறும் - விரிவுரை மழை பொழிந்த தவமுகிலாகி, தருமையாதீனத்தின் 26ஆவது குரு முதல்வராக அருளரசேற்று ஞானபீடத்தை அணிபெறவைக்கும் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் சென்னை தருமை ஆதீன சமயப்பிரசார நிலையத் தலைவராக இருந்தது, தமிழுக்குக்கிடைத்த தவப்பேறு அல்லவா? திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் இளவரசு வித்துவான், ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகளை அளித்தது தருமைத் தமிழ்க் கல்லூரி, அறக்கட்டளை மன்னராக விளங்கும் ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகளின் அடிச்சுவட்டில் தமிழ் வளர்க்கும் முனிவர் தொண்டு அனைவரும் அறிந்தது வினு எழுப்பிய அன்பர்க்கு இவை எட்டாதது பெருவியப்பே.

தருமை தந்த தமிழ்ச்செல்வங்கள் ;

தமிழகத்தின் எழிலுரை மன்னன் புலவர் கீரன், சட்டமன்ற மேலவை உறுப்பினர் அருந்தமிழ்ப் புலவர் அறிவுடை நம்பி ஆகியோர் தருமைத் தமிழ்க் கல்லூரியிலே தமிழ் கற்றவர்களே ; நானூற்றிற்குமேற்பட்ட நற்றமிழ்ப்புலவர்களை உருவாக்கிவெள்ளி விழாக்காண இருக்கும் தமிழ்ப்புலவர் கல்லூரி தருமையாதீன அருள் நிழலில் தமிழ் மணம் பரப்பி நிற்கிறது. பதினுயிரக் கணக்கான தமிழ் மாணவர்கட்குத் தமிழகமெங்கும் பரவலாகச் சென்றுசெய்யும் தமிழ்ப்பணியை மறக்கமுடியுமா நாடும்மொழியும்! விமரிசனம் செய்ய முற்பட்ட நண்பர் இவற்றையெல்லாம் ஒரு முறை சிந்திக்க வேண்டாமா ?

தூய திருக்கோயில் நிர்வாகம் :

இருபத்தேழு திருக்கோயில்களை ஆட்சிபுரிந்து வருவதும் பலமுறை தூய்மைப் பரிசுகளைத் தன் திருக்கோயில்களுக்குப் பெற்றுச் சிறப்பதும் இத்தருமையாதீனம் என்பதும், இதனைச் சார்ந்த தேவாரபாடசாலையில் பயின்று நாடெங்கும் தெய்வத் தமிழ் பரப்பும் இன்னிசைத் தமிழ்வாணர்கள் எண்ணற்றோர் என்பதும் அனைவரும் அறிந்த உண்மை.

தமிழ் அறிஞர் பாராட்டு :

ஆவணிமூலத் திருநாள்தோறும், 25 ஆண்டுகளுக்கு மேலாகத் தலைசிறந்த தமிழ்ப்பேரறிஞர்களையும், விஞ்ஞான வித்தகர்களையும், சைவசித்தாந்தப் பெரும்புலவர்களையும் பட்ட மளித்துப் பாராட்டி வருவது இத்தருமையாதீனம். தமிழ் அறிஞர்களைப் பாராட்டிப் போற்றுவது தமிழ்க்குச் செய்யும் பாராட்டு அல்லவா ? சொல்லின்செல்வர், பல்கலைச்செல்வர்

என்று கூறினாலேயே விளங்கிக்கொள்ளும் அளவிற்கு வித்தகப் பட்டங்கள் விளங்கி வருவதிலிருந்தே மக்கள் மன்றம் இவற்றை ஏற்றுக்கொண்டு மகிழ்வது விளங்கவில்லையா? வெள்ளியம்பல வாணரும், குமரகுருபர அடிகளும், வள்ளலாரால் 'உலகநாத வள்ளல்' என்று பாராட்டப்பட்ட உலகநாத முனிவரும், 'நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளையும் தானே' என்று பாராட்டப் பட்ட பைந்தமிழ்ப் புலவர் படிக்காசு முனிவரும் தருமையாதீனம் தந்த தமிழ்ச்செல்வங்கள். முத்துத்தாண்டவராய பிள்ளை, கா. சுப்பிரமணியப் பிள்ளை, காழி சிவ. கண்ணுசாமிப்பிள்ளை முதலிய பெருப்புலவர்கள் தருமையாதீன நீழலில் தமிழ்வளர்த்த சான்றோர்.

புலவர்க்காத்த திறம்:

இவ்வாறே மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களை ஆதரித்துத் திருவாவடுதுறை யாதீனம் தமிழ் காத்தது. பிள்ளையவர்கள் இல்லையேல் டாக்டர், உ. வே. சாமிநாத ஐயரவர்கள் இல்லை: ஐயரவர்கள் இல்லையேல் இன்று பாட்டும் தொகையுமாகிய சங்கத் தமிழ் இல்லை; பழந்தமிழ் இல்லை; பழந்தமிழ் நாகரிகம், இலக்கியம் பற்றி நாத்தழும்பேறப் பேசும் வாய்ச்சொல் விரர்க்கும் பேச்சுக்கு வாயில்லை; திருவாவடுதுறை ஆதீனத்தால் தமிழ்ச் சமுதாயத்துக்கு நேர்ந்திருக்கும் இந்த ஓர் உண்மையையாவது தமிழ்மகன் நினைத்து நன்றி பாராட்ட வேண்டாமா? சிவஞான முனிவர் தந்த நன்னூல்விருத்தி, இலக்கண விளக்கச் சூருவளி, முதற்சூத்திர விருத்தி முதலிய எண்ணற்ற இலக்கண-ஆராய்ச்சிப் பெரும்பனுவல்கள் காலவெள்ளத்தைக் கடந்து என்றும் நிலைபெறும் இவ் ஆதீனத் தமிழ்ச் செல்வங்கள், தமிழிலக்கிய வரலாற்றில் சைவ மடங்கள் வளர்த்த தமிழ் குறித்துப் பாராட்டி எத்தனையோ உலகப் பேரறிஞர்கள் ஆராய்ந்து வரும் இக்காலத்தில், தமிழுக்கு என்ன லாபம்? என்று வினைத் தொடுப்பதில் உள்ள பொருளற்ற தன்மையை எடுத்துரைக்க எத்துணையோ சான்றுகள் காட்டலாம்.

கல்லூரித் தமிழ்க்கு:

மயிலாடுதுறையிலே ஞானம்பிகை மகளிர் கல்லூரி அமைக்க ஒன்றரை இலட்சம்வெண்பொற்காசுகளும், திருவாரூரில் டாக்டர். கலைஞர், திரு மு. கருணாநிதிகலைக்கல்லூரி கட்டுதற்கு சகாய விலையில் நிலமும் ஒரு இலட்சம் வெண்பொற்காசுகளும் வழங்கியது தருமையாதீனம், பேரூர் தமிழ்க் கல்லூரி மாயூரம் அ. வ. அ. கல்லூரி முதலிய உயர் கல்வி நிலையங்களில் தமிழ் மொழியில் மிகுந்த மதிப்பெண்கள் பெறும் மாணவர்க்குப் பொற்பதக்கங்கள்

(தொடர்ச்சி 282ம் பக்கம் பார்க்க)

சிவதருமோத்தரக் கட்டுரை எண் 4.

சிவஞான தான விதி

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்.

திரு. ச. தண்டபாணி தேசிகர்

'விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்நெறி ஞானமாகும்' என்பது அநுபூதிவாக்கு. சிவசந்நிதியில் திருவிளக்கு இடுவதைப் போன்ற சிறந்த புண்ணியம் வேறொன்றுமில்லை. கோயிலுக்குப் போகும்போது ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற அளவு கபிலைப்பசுவின் நெய்யைக்கொண்டு விளக்கிடுதல் வேண்டும். கபிலைப்பசுவின் நெய்யால் விளக்கிடுதல் உத்தமத்தில் உத்தமம். மற்றைய பசுக்களின் நெய்யால் விளக்கிடுதல் உத்தமம். எள்ளின் நெய்யால் விளக்கிடுதல் மத்திமம். கடலைக் கொட்டையின் நெய் மரக்கொட்டைகளின் நெய் இவற்றால் விளக்கிடுதல் அதமமும், அதமாதமும் ஆம். விளக்கிற்குத் தாமரைத் தண்டில் இருந்து எடுத்த நூல் மிக உகந்தது; ஏற்றது. பருத்திப் பஞ்சு நூல் இடையாயது. ஏனைய பூளைப் பஞ்சு, இலவம் பஞ்சு இவற்றால் விளக்கிடுதல் கூடாது. யாட்டின் நெய் எருமைகளின் நெய், கிழிந்த துணி இவற்றைக்கொண்டு விளக்கிடுதல் கூடாது. விளக்குத் திரியில் மயிர் முதலியனவும் பறவைகளின் இறகு முதலியனவும் கலந்திருந்தால் துர்நாற்றம் வீசும். அதனால் திருக்கோயிலின் தெய்வீகத் தன்மை குறையும்; ஆகையால் விளக்கிடும்போது திரியையும் நெய்முதலியவற்றையும் நன்றாகச் சோதித்து விளக்கேற்றல் வேண்டும். சிண்டல் நெய், முறுகிய நெய், எருமை முதலியவற்றின் நெய் இவைகளைக்கொண்டு தீபமிடுதல் ஆகாது.

பழமையான கல்வெட்டுக்களில் விளக்கு: இறைவன் திருமுன்பு திருநொந்தா விளக்கேற்றவும், சரதீபம் அடுக்குத்தீபம் முதலியன வைக்கவும் ஆக நம் மன்னர்கள் முப்பத்திரண்டு பசுக்களைக் கொடுத்தார்கள். தொண்ணூற்றாறு ஆடுகள் கொடுத்தார்கள் என்று வரலாறுகள் கூறுகின்றனவே, ஆட்டு நெய்யால்

தீபம் இடக்கூடாது என்றபோது தொண்ணூற்ரூறு ஆடுகள் எதற்கு என்று கேட்கலாம். ஆடுகளைப் பெருக்கி வளர்த்து அவற்றை விற்ற முதலைக்கொண்டு நெய் தீபமிடுதலே மரபன்றி ஆட்டு நெய்யாலேயே தீபமிடுதல் வழக்கமன்று. ஆகையால் விதிப்படி விளக்கையேற்றி கிழக்குமுகமாகவேனும், வடக்குமுகமாகவேனும் சுடர்விட்டு எரிய விடல் வேண்டும்.

விளக்கேற்றிய பிறகு அவ்விளக்கை மலரிட்டு வழிபாடு செய்தல் வேண்டும். வலம் வருவதும் ஆகம விதிப்படி அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்களைச் செய்தலும் ஒளிவளர் விளக்கைப் புருவமத்தியில் வைத்துத் தியானித்து வழிபடுதலும் வேண்டும். அஷ்டாங்க நமஸ்காரமாவது தலை, இருகைகள், இருகன்னங்கள் இருபுயங்கள், முகவாய் என்ற எட்டு அவயவங்களும் நிலத்தில் தோய தண்ட வடிவாய் விழுந்து நமஸ்கரித்தலாம்.

பஞ்சாங்க நமஸ்காரமாவது, சிரம், கரம், முழந்தாள் என்னும் ஐந்துறுப்புக்களும் நிலத்தில் தோய வழிபடுவது. இங்ஙனம் சிவசந்நிதானத்தில் விளக்கேற்றிவைத்து வழிபடுதலோடு, குருவினிடத்தில் சிவஞான உபதேசம் பெற்றுச் சிந்தித்துத் தெளிதல் வேண்டும்.

சிவம் - சிவஞானம் - குரு - இம்மூன்றும் தம்முள் ஒத்தவை ; சிவனைக்காட்டிலும் சிவஞானம் உயர்ந்தது. மகிமைமிக்கது ; சிவஞானத்தைக் காட்டிலும் அதனை உபதேசிக்கும் ஆசாரியன் சிறந்தவன்.

சிவஞானத்துக்கு எத்தனைப்பெருமையுண்டோ அத்தனையும் உபதேசிக்கும் ஆசாரியனுக்குண்டு. பின்பு ஆசாரியனிடத்து அனுமதி பெற்று மேற்செய்யும் கருமங்களையும் சொல்லுகிறேன். கவனமாகக் கேட்பாயாக.

ஆசிரியனை வழிபட்டு அனுமதி பெறும் முறை :

மாணக்கன் ஆசிரியனைப் பரசிவத்தை வழிபடுவது போலவே பூசித்து நேசித்துப் போற்றி வலஞ்செய்து, வணங்கி எழுந்து இருகரங்களையும் சிரமேற் குவித்துக்கொண்டு, ஒளியான திருமேனி படைத்த தேசிகனே! அடியேன் மேற்கொள்ள இருக்கும் சிவஞான தானமாகிய செயல் ஒரு குறையுமின்றி திருவருளால் இனிது நிறைவேறத் திருவருள் பாலிக்கவேண்டும் என்று விண்ணப்பித்து அவர் அனுமதி பெற்றுக் காவிரி கங்கை சிவ தீர்த்தங்கள் முதலியவைகளிற் சென்று நீராடி, தோய்த்துலர்ந்த

வெள்ளையாடையுடுத்துத், திருவெண்ணீறு அணிந்து, சிவத் தியானம் புரிந்து மீளவும் வணங்கி எழுந்து முறைப்படிச் சிவ ஞானப்பனுவலை வைத்துப் பூசித்து ஆசிரியருக்கும், அடியார்க் கும், நல்ல சிவ விரதியருக்கும், சிவ வேதியருக்கும் மனம் மகிழும் வண்ணம் அன்னம் பாலிக்க வேண்டும். பின்னர் கிழவர், பேராசைக்காரர்கள், சிறுவர்கள், வறியர், பிணியர், அநாதைகள் குருடர், செவிடர், முடவர் இவர்கள் அனைவருக்கும் அன்னம் முதலியவற்றை அருத்துதல் வேண்டும். அதன் பின்பு மாதா பிதா ஏனைய சுற்றத்தார் இவர்களுடன் தானுமிருந்து புசித்தல் வேண்டும். பின்பு தன்னடியார்களையும், அப்போது வந்த விருந்தினர்களையும் இன்னார், இனியரென ஆராயாது எல்லாருக் கும் உணவளித்தல் வேண்டும்.

கணபலி :

அன்றிரவு உருத்ரகணநாதர் முதலாகச் சேத்திரபாலர் ஈறாக எல்லாக் கணநாதருக்கும் பலியிட்டுப் பின்பு பிரமசாரியா யின் உறங்குக. விரிவுரையாளன் இல்வாழ்வானாயின் உறங்காது விழித்திருக்க. அடுத்தநாள் முதல் சாமத்தில் இரண்டு முழ நீள அகலம் உள்ள மண்டபத்தை விதிப்படி அனைவரும் மகிழும் வண்ணம் அமைக்கவேண்டும்.

சரஸ்வதி பீடமும் சிவஞான பூசனையும் :

அம்மண்டபத்தில் நாணல் கழி முதலியவற்றால் விமானம் அமைத்து அலங்கரித்து ஆன்மாக்களுக்குத் தாய் போன்ற திரு முறைகளை எழுந்தருளச் செய்து வழிபடுக.

பின்பு அத்திருமுறையைப் பார்த்துப் பழமையான தமிழ் ஆரியம் முதலான எழுத்துக்களால் திருமுறையையும், சிவாகமங் களையும் எழுதச் செய்தும் பூசிக்க. மேல் ஆசிரியன் உணவின்றி சிவபூசை அங்கி வழிபாடு முதலியவற்றை முடித்துக்கொண்டு திருமுறையை எழுதத் தொடங்குக. அங்ஙனமே எழுதி முடித்துத் தானஞ் செய்யும்போதும் இம்முறையைப் பின்பற்றுக.

தானஞ்செய்வோரிலக்கணம் :

சிவஞான தானஞ் செய்வோன் உணவின்றிச் சிவபூசை அக்கினி காரியங்களை முடித்துக்கொண்டு சாந்தி கும்பத்தை வைத்திருக்கும் மண்டபத்தில் வைத்து வழிபட்டு அடியேனுடைய மலமாயா கன்மங்களைப் போக்கி திருவருளைத் தந்தருள்க என ஞானசிரியனை வழிபடுக.

அன்றிரவு வழக்கு மொழி இலக்கண மொழி இவற்றால் நிரம்பிய செந்தமிழ் முதலிய எல்லா மொழிகளிலும் உள்ள பாடல்களாலும், மக்களை வசப்படுத்தும் கூத்துக்களாலும் உறக்கத்தைப்போக்கி விழித்திருக்கக் கடவன். பின்பு விமானத்தில் சிவாகமத்தை எழுந்தருளப் பண்ணி உள்ளன்போடு சிவிகை தூக்குபவர்கள், கண்டு களிப்பவர்கள் அனைவரும் வணங்கி வாழ்த்த வீதிவலம் வந்து திருக்கோயிலுக்குச் சென்று இறைவன் திருமுன்பு இறக்கிவைக்க, பின்னர் திருமுறையை வெள்ளையாடை வெள்ளைமலர், வெள்ளையாபரணங்கள் சாத்தி, வெற்றிலைப்பாக்கு இவைகளை வைத்து நிவேதனம் பண்ணி வழிபடுக. திக்குகள் தோறும் பலியிடுக. சிவபூசை செய்க. கொலை, களவு முதலியவற்றை அறவே நீக்குக. சிறைப்பட்டவர்களைச் சிறையினின்று விடுதலை செய்விக்க. சிவபெருமானுக்குச் சிறப்பு வழிபாடு இயற்றச் செய்க. சிவஞானதானத்திற்கு அங்கமாக ஒரு நாள் இறைவனை எழுந்தருளப் பண்ணிவைத்து வீதிவலம் வருக. இறைவனைச் சிவாகமங்கள் திருமுறைகள் இருக்கின்ற மண்டபங்களின் பக்கத்தில் எழுந்தருளப் பண்ணித் தூப தீபம் கொடுத்து வழிபட்டு திருமுறைகள் வெல்க! சிவாகமங்கள் வாழ்க!! என்று வாழ்த்தொலியெடுத்து மீண்டும் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிய அன்பால் உருகி அகம் குழைந்து வழிபடுக. திருமுறைகளையும் சிவாகமங்களையும் விளக்கி விரிவுரையாற்ற இருப்பவர் மீண்டும் தனது ஆசாரியனை வணங்கி வழிபட்டுச் சிவசந்நிதியில் தனது ஆசாரியனது திருக்கரத்தில் நூல்களைத் தானஞ் செய்து சிவசந்நிதியில் எழுந்தருளியிருந்து பதச்சேதம், சொற்பொருள் விரித்தல், தொடர்மொழியைப் பிரித்தல், கொண்டு கூட்டல், வினா, விடை, ஆகிய ஐந்து வகையாக உரை விரித்துப் பூபாளம் பைரவி முதலான இசையுடன் கலந்து ஒரு நாளைக்கொருபடலமாக அல்லது ஓர் பதிகமாக நாடும் அரசும் செழிக்க விரிவுரையாற்றல் வேண்டும். கேட்பவர்கள் மனங்குளிர அன்பால் அகம் குழைய நிறுத்திப் பொருள் உரைத்தல் வேண்டும்.

பொருள் விரிக்கும் முறை:

சிவாகமங்களின் சுலோகங்களையும் அல்லது திருமுறைப் பாடல்களையும் அந்தந்த காலங்களுக்குரிய இராகங்களில் இனிமையாக எழுத்துப்பிழை சொற்பிழை இன்றிப்படித்தல் வேண்டும். அடுத்துப்பாடலில் கிடக்கின்ற முறை தவறாமல் சொற்களைச் சந்தி பிரித்து இசையோடு வாசித்தல் வேண்டும்.

அடுத்து ஒவ்வொரு பதத்திற்கும் பொருள்விடாமல் தொடுத்துப் பதவுரை கூறுதல் வேண்டும்.

அடுத்துப் பதங்களில் உள்ள தொடர்மொழியைப் பிரித்துக் காட்டுதல் வேண்டும்.

அதன்பிறகு அன்வயம் எனப்படும் சொற்களைப் பொருட் கேற்றவாறு கூட்டி முடித்தலையும் இசையொடு சொல்லுதல் வேண்டும்

பின்னர் அவையோர்க்குண்டாகும் ஐயங்களைக் கேட்டறிந் தும் இன்ன நிலையில் இன்ன ஐயம் அவர்களுக்கு உண்டாகலாம் என ஊகித்தறிந்தும் அதற்கேற்ற விடைகளைச் சொல்லுதல் வேண்டும். இங்ஙனம் ஆசாரியன் முறைதவருத சாதகனுக்கும் தன்னுடைய பிள்ளைகளுக்கும் சிவஞான தானத்தைச் செய்யக் கடமைப்பட்டவன்.

அரசர் முதலியோர் பொருள்கொடுத்துத் திருமுறைகளை விரித்துரைக்கச்செய்க. பெண்கள் ஒருபோதும் சிவாகமங்களையும் திருமுறைகளையும் விளக்கியுரைத்தல் கூடாது. சிவதீட்சையும் ஆச்சார்ய அபிஷேகமும் பெற்றுச் சிவபூசையை இடைவிடாது இயற்றுபவர்களே சிவாகமங்களையும் திருமுறைகளையும் விளக்கி யுரைக்கத் தக்கவர்கள்.

ஒவ்வொரு நாளும் ஆசாரியன் சிவஞானதானமாகிய சிவாகமத் திருமுறை விரிவுரைகளை நிகழ்த்திய பிறகு திருமுறை மண்டபத்தில் வைத்த சாந்தி கும்பத்திலுள்ள நீரை இதனைச் செய்கின்ற அரசன், அமைச்சன், அவ்வூர்ப் பெருமக்கள் அனை வருடைய தலையிலும் அன்போடும் திருவைந்தெழுத்து ஜபத் தோடும் தெளிக்கக்கடவன். அதனுல் அவரவர்களும் கொடிய பாவங்களினின்று விடுபட்டு மாசு கழுவிய மாணிக்கம்போல ஒளிவிடுவார்கள்.

இவ்வண்ணம் சிவஞானதானஞ் செய்யும் ஆசாரியனுக்கு அரசன் பொன்னும் பொருளும் பூமியும் வழங்கி அவன் அருளைப் பெறுவானுக. ஏனையோர் தத்தமக்கு இயன்ற அளவு காணிக்கை தந்து வணங்குவார்களாக. எடுத்தநூல் இடையூறின்றி இனிது முடிந்ததும் சிவனடியார்க்கும், சிவவேதியருக்கும் மாகேசுவர பூசை செய்து அனைவரும் வழிபடுதல் வேண்டும். இவ்வண்ணம் சிவஞானதான விதியை உபதேசித்த முருகப்பெருமான் தானப் பயனையும் சிவாகமங்களையும் திருமுறைகளையும் பழுதுபடாமல் பாதுகாப்பதால் விளையும் பயனையும் பெயர்த்தெழுதுதல் ஓலை யுதவுதல் எழுத்தாணியுதவுதல், ஓதுவோருக்குபகரித்தல் முதலிய காரியங்களை விருப்பத்தோடு செய்தவர்கள் பயனையும் மேலே விளக்குகின்ருர். [வளரும்]

திருமந்திரம் - மூலமும் உரையும்

திருக்குறள்வேள்,

திரு. ஜி. வரதராஜப் பிள்ளை B. A.,

(மலர் 31. இதழ் 4. பக்கம் 239 இன் தொடர்ச்சி)

239 நாள்தோறும் மன்னவன் நாட்டில் தவநெறி
நாள்தோறும் நாடி அவநெறி நாடானேல்
நாள்தோறும் நாடு கெடமூட நண்ணுமால்
நாள்தோறுஞ் செல்வம் நரபதி குன்றுமே.

நாள்தோறும் மன்னவன் நாட்டில் – நாள்தோறும் அரசன் தன்னுடைய நாட்டில். தவநெறி நாள்தோறும் நாடி - நன்னெறியினை முறையாக ஆராய்ந்து. அவன் நெறி நாடானேல் – அவன் நீதி முறைமையைச் செய்யாவிடின். நாள்தோறும் நாடு கெட - நாள்தோறும் நாட்டின் வளம் குன்ற. மூடம் நண்ணுமால் - நாட்டு மக்களிடையே அறியாமை பொருந்தும். நாள்தோறும் செல்வம் நரபதி குன்றுமே - நாள்தோறும் அரசனது செல்வமும் குறைந்துகொண்டேவரும்.

நாட்டில் நீதிமுறை இல்லையெனில் நாடு வளங்குன்றி அரசு கெடும். 2

240 வேட நெறிநில்லார் வேடம்பூண் டென்பயன்
வேட நெறிநிற்போர் வேடம் மெய்வேடமே
வேட நெறிநில்லார் தம்மை விறல்வேந்தன்
வேட நெறிசெய்தால் வீடது வாகுமே,

வேட நெறி நில்லார் வேடம் பூண்டு என் பயன் - வேடத்துக்குரிய நெறியில் அகமும் புறமும் ஒத்து நில்லாதார் வேடத்தை மட்டும் பூண்டுகொண்டு என்ன பயன்? வேடநெறி நிற்போர் வேடம் மெய்வேடமே - ஆனால் வேடத்துக்குரிய நெறியில் பொருந்தி வாழ்பவர் வேடமானது உண்மையான வேடமாகும். வேடநெறி நில்லார் தம்மை விறல் வேந்தன் - வேடத்துக்குரிய நெறியில் நில்லாதவரை வலிமை மிக்க அரசன். வேடநெறி

செய்தால் வீடது வாகுமே - தண்டனை முதலியவற்றால் வேடத்துக்குரிய நெறியில் நிற்கச்செய்தால் அது விடுபேற்றை அளிக்கும் வழியாகும்.

வேடதாரிகளை வேடத்துக்குரிய நெறியில் நிற்கச் செய்ய வேண்டியது வேந்தர்க்குரிய கடனாகும். 3

241 மூடங் கெடாதோர் சிகைநூல் முதற்கொள்ளில்
வாடும் புவியும் பெருவாழ்வு மன்னனும்
பீடொன் றிலனாகும் ஆதலாற் பேர்த்துணர்ந்
தாடம் பரநூற் சிகையறுத் தால்நன்றே.

மூடங் கெடாதோர் சிகை நூல் முதல் கொள்ளில் - அறியாமை கெடாதவர் சிகை, பூணூல் முதலிய வேடங்களைக் கொண்டால், வாடும் புவியும் - மண்ணுலகத்தில் வாழ்பவர் வாடுவர். பெருவாழ்வு மன்னனும் பீடொன்று இலனாகும் - பெருவாழ்வு வாழ்கின்ற அரசனும் பெருமை இல்லாதவனாவான். ஆதலால் பேர்த்துணர்ந்து - ஆதலால் வேடத்தின் உண்மையை மீண்டும் ஆராய்ந்து அறிந்து. ஆடம்பர நூல்சிகையறுத்தால் நன்றே - ஆடம்பரமாக அணியும் பூணூலையும் சிகையையும் களைந்துவிடுதல் நாட்டுக்கும் அரசனுக்கும் நன்மையாம்.

பேர்த்து உணர்தலாவது, சிகையும் நூலும் மக்களை ஏமாற்றும் என்று உணர்தல். "பெற்றம் புலியின்தோல் போர்த்து மேய்ந் தற்று" என்ற நாயனார் வாக்கைக் காண்க

ஆடம்பரத்துக்காக அணியும் நூலும் சிகையும் களையச் செய்தால் நாட்டுக்கும் அரசனுக்கும் நன்மையாம். 4

242 ஞானமி லாதார் சடைசிகை நூல்நண்ணி
ஞானிகள் போல நடிக்கின் றவர்தம்மை
ஞானிக ளாலே நரபதி சோதித்து
ஞானமுண் டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே.

ஞானமிலாதார் சடை சிகை நூல் நண்ணி - ஞானத்தை அடையாதவர் சடையும், சிகையும். பூணூலும் பெற்று. ஞானிகள் போல நடிக்கின்றவர் தம்மை - ஞானிகளைப்போல நடிக்கின்றவர்களை. ஞானிகளாலே நரபதி சோதித்து - ஞானிகளைக்கொண்டே இவரது உண்மையினை அரசன் சோதித்து. ஞானம் உண்டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே - ஞானம் பெறும்படி செய்தால் நாட்டுக்கே நன்மை உண்டாகும்.

சடை - முனிவர்க்குரிய சின்னம். சிகை - பிரம்மச்சாரிக்குரிய சின்னம். சின்னம் உண்மைநிலை அறியாது மறைக்கும்.

வேடதாரிகளை ஞானிகளைக்கொண்டு சோதித்து ஞானம் உண்டாக்குதல் நாட்டுக்கு நன்மையாம். 5

243 ஆவையும் பாவையும் மற்றற வோரையுந்
தேவர்கள் போற்றுந் திருவேடத் தாரையுங்
காவலன் காப்பவன் காவா தொழிவானேல்
மேவும் மறுமைக்கு மீளா நரகமே.

ஆவையும் பாவையும் மற்று அறவோரையும் - பசுவையும், மகளிரையும் மற்றும் அறநெறியில் நிற்பவரையும், தேவர்கள் போற்றுந் திருவேடத்தாரையும் - தேவரும் வணங்கத் தக்க உண்மையான வேடத்தாரையும். காவலன் காப்பவன் - அரசன் காத்தற்கு உரியவன். காவாது ஒழிவானேல் - அவன் காக்க வில்லையாயின். மேவும் மறுமைக்கு மீளா நரகமே - அவன் மறுமையில் நித்திய நரகத்தை அடைவான்.

திருவேடத்தார் - அகமும் புறமும் ஒத்து விளங்கும் உண்மை வேடத்தார்

பசுக்கள் முதலியவற்றைக் காப்பது அரசர்க்குக் கடமை யாகும். 6

(தொடரும்)

பார்வையாளர் குறிப்பு நகல்

தருமபுரம் ஆதீனம்

ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானம். திருப்பனந்தாள்.

4—3—72, இன்று காலையில் திருக்கோயிலை வலம் வந்து சுவாமியைத்தரிசிக்கும் பேறுபெற்றேன், கோயிலின் தூய்மையும் அமைதியும் கூடிய தெய்வீகச் சூழ்நிலை மனதுக்குப் புத்துணர்ச்சி யையும் பரவசத்தையும் ஊட்டின. சைவம் தழைக்க தருமை ஆதீனம் மடம் ஆற்றும் சீரிய தொண்டுகளில் இக்கோயிலின் பராமரிப்புத்தன்மையும் நீடு விளங்குகிறது.

(ஒப்பம்) D. உமாபதி,
துணை ஆணையர்,
விவசாய வருமானவரி; தஞ்சை.

திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

மூலமும் – உரையும்

உரையாசிரியர் :-

பண்டித வித்துவான், தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை

(மலர் 31, இதழ் 3, பக்கம் 189 இன் தொடர்ச்சி)

(கொச்சகக் கலிவெண்பா)

இறையவனே முக்கணுடை
யெந்தையே அன்பருளத்(து)
உறைபவனே புன்மையினேன்
உளத்திமிர மலமகற்றி
மறைபுகழுன் திருவடியை
வழுத்தும்வர மேதருவாய்
சிறையளிகள் இமிர்கழனித்
திருவையாற் றொளிர்முதலே, (33)

(இ - ள்) இறையவன் ஏ - எல்லா உயிர்களிடத்தும் தங்கியருளும்பிரானே! முக்கண் உடை எந்தை ஏ - சோமன் சூரியன் அக்கினியெனும் முச்சுடர்களையும் கண்களாயுள்ள எம்முடைய பிதாவே! அன்பர் உளத்து உறைபவன் ஏ - அடியார்கள் மனத்தின்கண் கோயில்கொண்டெழுந்தருளியிருப்பவரே, புன்மையினேன் உளம்திமிரம்மலம்அகற்றி - இழிதகைமையேனுடைய மன இருளினையும் பாச வலியினையும் நீக்கி, மறைபுகழ் உன்திருவடியை வழுத்தும் வரம்தருவாய் - வேதங்களால் விதந்து ஓதப்பெற்ற தேவரீருடைய திருவடிகளையே வழுத்தலுறும் சீரிய வரம் ஒன்றனையே தந்தருளுவீராக, சிறை அளிகள் இமிர் கழனி - இறகுகளுடன் கூடிய வண்டினங்கள் ஆரவாரிக்கின்ற வளமிக்க மருதநிலங்கள் மிக்க, திருஐயாற்று ஒளிர்முதல் ஏ - திருவையாற்றின்கண் தேசவிளக்காகிய சிவபெருமான் அருட்சோதி யொளிகொண்டுள்ள முதல்வரே, அருள்புரிக. (எ - று.)

(கு - ரை) திமிர(ம்) மலம் - திமிரமாகிய மலம் எனப் பண்புத்தொகையாக்கினும் அமையும், வழுத்துதல் - இடைவிடாது துதிப்பது. புன்மை - தாழ்மை, ஒளிர்முதல் - 'அருட் சோதியாய், திருவையாறகலாத செம்பொற்சோதியாய் மிளிர்தலை யுணர்த்திற்று. கழனி - நன்செய்நிலம். இஃது மருதநிலத்தை யுணர்த்திற்று. மறைபுகழ்தலாவது - வேதநான் கினும் மெய்ப் பொருள் ஆய்விளங்குகின்றமை குறித்துத் துதிப்பது. இமிர்தல் - ஆரவாரஞ்செய்தல். உளம் (உள்ளம்) உள்ளுதலைச் செய்வதே உளமாயிற்று. திருக்குறுந்தொகையில் சித்தத்தொகை மனத் தொகை, உள்ளத்தொகை எனத் தலைப்புக்கொடு வருதலை நோக்கித் துணிதல்வேண்டும். முக்கணுடை எந்தை - நுதல் விழி நாட்டத்திறைவனுதலை யறிவுறுத்தியவாறும். "முக்கணப் பருக்கொருத்தர் மொழியாரோ" என்பது குமரகுருபரர் வாக்கு. மறை - மறைகளை (மனுக்களைத் தன்னகத்துட்கொண்டிருப்பது, "மறை நான்கே வான் சரடாய்" என்பது திருவாசகம், திருவடிப் பேறுறலே முத்திப் பேறுதலின், திருவடியே வேண்டினன் என்றார்.

முதுமறைகள் பணிந்தேத்து
முதற்பொருளே யொளிகாலும்
விதுவணியும் பூஞ்சடில
வித்தகனே சிறியேற்கு
மதுநிறையு(ம்) மணிவள்ள
வாய்க்கமல மாதுறையும்
புதுமைகொளை யாறுநின்
பொற்கழல்தந் தாள்வதென்றோ. (34)

(இ - ள்) முதுமறைகள் பணிந்து ஏத்தும் முதல் பொருள் ஏ-பழமையான வேதங்களானவை முறையான் வணங்கித் துதித் தலைப்புரியும் மேலாகிய பரசிவமானபொருளே], ஒளிகாலும் விது அணியும் பூ(ம்) சடிலம் வித்தகனே! - ஒளியினைவீசும் (பரப்பும்) பிறைமதியினை அழகிய குறுங்கண்ணியாகத் தரித்த பொலிவுற்ற கபரித்தமெனப் பெயரிய சடாமகுடத்தினையுடைய பெரும்வல்லமை (சதுரப்பாடு)யுடைய பரம்பொருளே! 'மது நிறையும் வள்ளம்வாய்க் கமல(ம்)மாது உறையும் - தேன் நிறை யும் கிண்ணம்போல் வாய் அகன்ற பரந்த தாமரைமலரிடத்துந் தங்கியுள்ள, திருமகளார் விரும்பித்தங்கும். புதுமை கொள் ஐயாறு! - ஆக்கந்தருவான் புதுமைபொருந்திய திருவையாற்று

இறைவரே! சிறியேற்கு - சிறுமையுடையவனாகிய அடியவற்கு நின்பொன்கழல் தந்து ஆள்வது என்று ஓ - தேவரீருடைய அழகிய திருவடிகளைக் காட்டி ஆட்கொள்வது எந்தநாளோ அறியகில்லேன். எ - று.

(கு - ரை) முதுமறை யென்பதும், பழமறையென்பதும் ஒன்று. விரிந்துகிடந்த வேதங்களை நான்கு கூறுக்கியுள்ளனர், 28 வது தோன்றிய வியாசர் என்பார். இதனால் வேதவியாசர் என அழைக்கப்பெற்றனராம். மறைமுதற் கிளந்தவாயான் என இறைவன் பன்னப்பெறலால் முதற்பொருள் என்றூர். ஒவி காலும் வித்தகனே எனவும், விது அணியும் பூஞ்சடில வித்தகன் எனவும் கூட்டிப் பொருள்காணல் வேண்டும். கமலம், செங்கமலம் வெண்கமலம் என்பனவாம். இவ்விரண்டிலும் உறையும் மாது, செந்திருவும் கலைமகளும் ஆவர். கல்வியுடைமையும் பொருளுடைமையும் உடையர் உளராம்படிச் செய்கின்ற இருமகளும் தங்கியருள் புரிதலின் புதுமைகொள் ஐயாறு எனப் பட்டது. களிப்பு இல்லா கழல்கள் ஆகலின் பொற்கழல் என்றூர். களிம்பாகிய பாசத்தடையுடைய உயிர்த்தொகுதிகட்கு மாசற்ற கழல்களே வீடாயிருக்கும் ஆகலின் பொற்கழல் என்றூர் எனலுமாம்! ஆள்வது - அடிமைகொள்வது, தாங்கள் பெருமையுடையீராகலின் சிறுமையுடையவனைக் காத்தருளல் கூடும் எனும் உறுதிபற்றியே சிறியேற்குப் பொற்கழல் தந்து ஆள்வது என்றே என இரங்கி விண்ணப்பித்ததாயிற்று. ஓகாரம் வினப்பொருளது; விது - சந்திரன்; இவ்வூரிற் சந்திரசேகரப்பெருமான் பெரிதும் சிறப்பிக்கப்பெறுதல் காணத்தக்கது,

என்றுமொளிர் திருவையாற்
றிணையிலியே நால்வருக்கும்
அன்றுவட வாலநிழல்
அமர்ந்தரிய நெறிகாட்டித்
துன்றுபரஞ் சுடர்க்கொழுந்தே
சுகப்பொருளே யென்னுளத்துள்
நின்றிருளைத் துறந்திடுதல்
நினக்கரிதோ புகன்றிடுவாய். (35)

(இ - ள்) நால்வருக்கும் - பிரமாவின் புத்திரராகிய சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் எனும் நான்கு முனிவரர் கட்கும், அன்று - உமாதேவியினைப் பிரிந்திருந்த காலத்தில், வட ஆல நிழல் அமர்ந்து - கல்லால மரத்தின் நீழலில் தென்முகப்

பரமாசாரியர் கோலங்கொண்டெழுந்தருளியிருந்து, அரியநெறி காட்டி - அறிதற்கு அரிய வேதாந்த முத்திநெறிதனை இருந்தபடியிருந்து சொல்லாமற்சொல்லிக் காணுமாறு செய்து (அறிதற்கரிய ஆகமநெறியினை - சன்மார்க்க நெறியாகிய ஞானநெறியினை உள்ளவாறுணரும்படி தெள்ளிதிற் காட்டியருளி) துன்றுபரம் சுடர்கொழுந்து ஏ - ஒன்றிய மேலாகிய செம்பொற்சோதியாகிய கொழுந்தே; சுகப்பொருள் ஏ - பேரின்பமாகிய முத்தியாம் பொருளே!, என்றும் ஒளிர் திருவையாற்று இணை, இலியே - எக்காலத்திலும் செம்பொற்சோதியாய் ஒளிர்கின்ற (பிரகாசிக்கின்ற, திருவையாற்றுப்பரம் பொருளாகிய ஒப்பில்லாதவரே! என் உளத்துள் நின்று - ஏழையேனுடைய மாசகலாமனத்துள் மாசகலுமாறு நிலைத்திருந்தருளி, இருளைத் துறந்திடுதல் - அறியாமையாகிய இருட்டினைப் போக்கிவிட்டு ஆட்கொளல். நினக்கு - தேவரீருக்கு, அரிது ஓ - அருமையுடைத்தாகுமா? ஆகாது. புகன்றிடுவாய் - இச்செயலினை அடியவற்குக்கூறியருளல் வேண்டும் என்பதாம். (எ - று).

(கு - ரை) சனகாதி நால்வருக்குணர்த்திய தென்முகப் பரமாசாரியர் நிலையொன்று சாம்ப தென்முகக் கடவுளாகிய நிலை முதலிய பலவுள. வீணைதடவிய தட்சிணாமூர்த்தியும் ஒருவராவர். இதனைத் திருநெய்த்தானத்திலும், சாம்ப தட்சிணாமூர்த்தியை திருஇடைமருதூரிலும் காணல்வேண்டும். திருவையாற்றில் எழுந்தருளிய தென்முகப் பரமாசாரிய சுவாமிகள் வேறெங்குமில்லாத நிலையுடையது. முயலகனை மிதியாது கூர்மத்தினை (ஆதாரசத்தியை) மிதித்துக்கொண்டிருக்கு நிலைமையுடையது. திருநந்தியெம்பெமாற்குபதேசம் புரிந்த நிலை வேறு.

"கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
யாறங்க முதற்கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக் கப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
யிருந்தபடி யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத் தொடக்கை வெல்லாம்

- பரஞ்சோதி திருவிளையாடல்

(தொடரும்)

"கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான்"

வித்துவான். திருமதி. ப. நீலா

(மலர் 31, இதழ் 2, பக்கம் 134 இன் தொடர்ச்சி)

50. சுந்தரப்பேரம்பெய்தியது

அரசன் அகமகிழ உரககங்கணர் கடிநகர் காட்டிய முறைமை கண்டோம். இனி அச் சங்கணி குழையினர் பஞ்சவனுக்கு அஞ்சேலென்றபயந்தந்து வளவன்மேல் வெங்கணைவிட்ட வகைமை காண்பாம்.

வெங்கயல் நீள்கொடி வங்கிய சேகரன் வெண்குடை நிழலில் ஞால மடந்தையோடுகூட செங்கமல, வெண்கமல வல்லி களும் மங்கலவாழ்வு பெற்று மகிழ்ந்தனர். இப்படிச் சீரோடு செழியன் ஆண்டுவரும் நாளில் சோணாட்டரசன் விக்ரமசோழன் பாண்டிநாட்டின் மேல் படையெடுத்தான். ஆழ்கடலுக்கிணையான சோழசைன்யம் யானை, தேர், குதிரை, காலாட்களுடன் உருத் தெழுந்தது. செம்பியனின் படைவீரர்கள் மிக்க கோபத்தோடு கன்னிநாடு புகுந்து ஆனிரைகளைக் கைப்பற்றுவதும், மலரும் நீரும் நிறைந்த ஏரிகளை உடைப்பதும், நகருக்குவரும் பல பண்டங்களைச் சூறையாடுவதும், செய்து நாட்டு மக்களை நெஞ்சு கலங்க அடித்தனர். இச்செய்தி மன்னனின் செவிகளை எட்டியது. என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து சோழப் படையினரின் ஆற்றலும் அளவும் உணர்ந்து படையொடு மோதவும் வழியின்றி மயங்கினன். இடருற்ற நேரமெல்லாம் இதமளிக்கும் ஆறணிபூரணனின் திருவடிகளை நினைத்தான். கொன்றை மணக்கும் வேணியனின் கோயிலை அண்மினன், பெருமானின் திருவடிகளை மனமொன்றி வணங்கி 'ஐயனே விக்ரம சோழனும் வேற்றுப் புலவரசர்களும் கூடி கூடலை வளைத்துக்கொண்டனர். அவர்களை வெல்லவல்ல சேனை அடியேனிடம் இல்லை. எனக்கு அரண் நினது திருவடிகளே - என்று பன்முறை கூறி இறைஞ்சினன்.

வழக்கம்போல் பிறைமுடிப் பெருமானும் பாண்டிய! நீ அஞ்ச வேண்டாம். விக்கிரம சோழனுடன் போரேற்று நடத்துக. நானும் நினது துணையாய் வருவேன். வெற்றிபற்றி ஐயமென்ன?

" என்னை யினிச்செயு மாறென மாறனிரந்து மொழிந்திடலும்
முன்னவன் வானிடை நின்றசரீரி மொழிந்தருள் வான்முதனீ
அன்னவ னோடம ராடுபினுமு மடைந்துத வித்துணையாய்
நின்னது வாகை யெனப்பொரு கின்றன நீயினியஞ்சலென "

என்றருளிச் செய்தான். பாண்டியன் சிந்தை களித்து இரு கண்கள் துளித்து செங்கை குவித்து அந்திமதிச்சடை அந்தணனை அகங்குளிர வணங்கி அரண்மனை மீண்டான். அதற்குள் வந்த ஒற்றன், இடபமலைக்கருகில் வந்தனன் பகைவன் என்றனன்.

அரசன் வங்கியசேகரன் மிக்க ஆரவாரத்தோடு அமர் புரியச் சென்றான். இயம்பல அதிர வலம்புரி அலற அலங்குளை மான்கள் இரதமணைந்திட, யானை குதிரை வீரர்கள் அணிசெய்ய விண்தொடும் ஓர்தேர் மேலேறி களத்திற்குச் சென்றான். சோழன் விக்கிரமனுடைய படை திருவாலவாய் மதிலின் புறத்து அகழி போல் வளைந்து சூழ்ந்துகொண்டது. அந்தப் படைக்குமுன் பஞ்சவன்படை வஞ்சினங்கூறிப் பொரத்தொடங்கியது. யானை தேர் குதிரை காலாள் என்ற படைகள் தம் தம் இனத்துடன் மோதின. முடங்கு வெஞ்சிலை வீரரும், விடங்கலுழ்ந்திடும் வேலரும், இடங்கையில் கொண்ட தோலரும் (கேடயப் படையினர்) மடங்கலேற்றுடன் மடங்கலேறு பொருவதுபோல் பொருதனர். ஆதிசேடன் பொறுக்கும் பாரத்தைத் தன்தோள்களில் தாங்கிய மீனவனுடன் நேரியர்கோன் சண்டையிட்ட காட்சி மதியத்துடன் கதிரவன் பொருத காட்சிபோல இருந்தது. எதிர்த்துவரும் வேலையும் அம்பையும் விலக்கும் ஆற்றலையும் இருதரப்பினரும் பெற்றிருந்தனர்.

பின்னிடாது இருபடையினரும் அமராடுமெல்லையில் உத்திர தேச மன்னர் தம் படைத்துணையுடன் வளவனுக்குத் துணைவர வழுதிபடை ஆற்றாது பின்னிட்டது.

வாளொடு சிலையிழந்தனர் வீரர். தேரோடுங் கரி பரியிழந்தனர் பாகர். இப்படித் தென்னவன் படை சிதைந்தோட - வாகை தன்னது என்று சங்கெடுத்து முழங்கினன் செம்பியன். அந்த நேரத்தில் மீனவர்களுக்காகத் தண்ணீர்ப்பந்தல் வைத்தவனும் சோழனை மடுவில் விட்டியவனுமான சோமசுந்தரப் பெருமான் இப்போது வங்கிய சேகரனுக்காக வேட வடிவங்கொண்டு போரிட வந்தான். மேருவையொத்த சிலையில் சுந்தரேசன்

என்ற பெயர் தீட்டிய அம்பைப் பூட்டி, வென்றனம் என்ற செருக் கோடு நிற்கும் வளவன் சேனைமேல் உருத்துச் செலுத்தினன். வேடன் விட்டகணை ஒன்றுக்குப் பத்தாயிரம் வீரர் பலியாகவே மிகுந்த கணைகளுக்குப் பலியாகும் தன் வீரர்கள் தொகையை எண்ணிப் பார்த்துச் சோர்வுற்றான் சோழன்.

இவ்வளவு வல்லமை வாய்ந்த கணைகளுக்கு உரியான்தான் யாவன் என்றறிவோமென்று கணைகளிலொன்றை வாங்கிப் பார்க்க, அதில் சுந்தரேசன் என்றநாமமிருக்கக்கண்டான். பாண்டியனுக்குப் படைத் துணையாக வந்தவன் ஆலவாயண்ணலே என்பதுணர்ந்து பின்னிடத் தொடங்கினன் காவிரித் தலைவன். அந்நேரம் செருவுக்குத்துணையாய்வந்த உத்திரதேச மன்னரும், துருக்கரும், ஒட்டியரும் ஒன்றாக இணைந்து சோழனது போக்கைத் தடுத்து நீயே போருக்குப் பின்வாங்கினல் ஆண்மைதான் யாரிடம் உண்டு? உன் மானம் என்னவாகும் என்று இடித்துக் கூறி அவன் பொருட்டுத் தாங்களே முன்வந்து கௌரியன்மேல் கடியமொழிகூறி அம்புகளையும் விட்டனர். அந்தச் சொல்லினும் கடியவேக அம்புகள் சுந்தரேசன் விட்ட கணைகள்முன் நில்லா வாய் ஓடின. அத்துடன் வேடனும் பகைப்படையிலிருந்த யானை, குதிரை, தேர், காலாள் என்று மீதமொன்றும் இல்லாமல் வதைத் தான்.

போர்க்களத்தின் பொற்பு :

ஆவிமுன்னே போக அதைத் தொடர்ந்து செல்வனபோல் யாக்கைகள் எழுந்து குதித்தன. தலையற்ற கவந்தம் ஆட குறையுயிர்ப் பிணங்கள் தாளமிட்டன, தன் தலை விழ வெட்டிய பகைவன் உடலைத் தன் கைவேலால் குத்திப் பின் குறையுடல் மண்ணில் விழுந்தது. ஒரேநேரத்தில்விழும் இரண்டு தலைகள் நட்போடு வாலெயிறு தோன்ற நக்கன. ஆகாயத்தில் வட்டமிடும் பருந்தும், இருட்கூட்டம் கவிந்தாற்போன்ற காகங்களும் கீழே உயிரற்ற உடல்கள்மீது சிறகுகளை அசைத்துக்கொண்டு நிற்பது உடல்களின் வியர்வை நீங்க இறகுகளால் விசிறுவதுபோல இருந்தது;

சோரியாற்றில் மிதக்கின்ற தேர்களை வெம்பேய்ப் பிள்ளைகள் மூழ்கிச் சென்று கவிழ்ப்பது கடலில் செல்லும் மரக்கலங்களைச் சுறுமீன்கள் கவிழ்ப்பதுபோல இருந்தது. மனதை ஐம்பொறிகள் பற்றி இழுப்பதுபோல் இறந்தவர்களின் நெஞ்சகத்தைக் காக்கைகளும், பருந்துகளும், பேய்களும், பூதங்களும் கொத்தி இழுத்தன, வெற்றிமகள் சமைக்கும் மடைப்பள்ளியாகக் களம் காட்சியளித்தது என்கிறார் பரஞ்சோதியார். விசயச்செல்வி அரும் மடைப் பள்ளியில் முறம் யானையின் செவி. துடுப்பு அதனது வால்.

அரிசி யானைக்கோட்டின் முத்துக்களே. உரல் அதனது பருத்த காலாகும். உலக்கை - யானையின் திண்ணிய தந்தமே. அடுகலம் - கன்னக்கதுப்பு. மத்தகம் - அடுப்பு. சிவந்த குருதியே தீ. இப்படி மடைப்பள்ளியைக் களத்தில் காண்கிறோம்.

பேய்கள் பிணங்களை வரிசையாகக் கரைபோல் அடுக்கிப் பெருகிவருகின்ற இரத்த ஆற்றை ஒழுங்குபடுத்த - வலிய பூத மொன்று அப்பேய்களை உதைத்துத் துரத்திவிட்டு அந்தக் கரைகளையும் உடைத்துவிட்டுக் கைகளை வாயருகே மடுத்து இரத்தப் பெருக்கைக் குடிக்கும் காட்சி வைகையை அருந்திய குண்டோதரனை நினைவூட்டியது.

சேரிடம் அறிந்து சேர் :

பொன்னிநாடனுக்குத் துணையாகிவந்த அயற்புலமன்னர்கள் மதுரை நாயகனின் கணைகளுக்காற்றமல் பட்டுவிழுந்தனர். அது நச்சு மரத்தினை அழிக்க எழுந்த தியில் சந்தன மரங்களும் கருகினாற் போலவாயிற்று.

"புரத்தினு ளுயர்ந்த கூடற் புண்ணிய னெழுதி யெய்த
சரத்தினி லவிந்தார் சென்னிக் குற்றுழிச் சார்வாய் வந்த
அரத்தினை அறுக்கும் வைவே லயற்புல வேந்தர் நச்சு
மரத்தினை யடுத்த சந்துங் கதழெரி மடுத்ததென்ன."

வெஞ்சின வேடனின் கணைவெள்ளத்தாழ்ந்து,வெஞ்சின முறுதன் சேனை மடிந்தது கண்டு; எஞ்சிய படை சூழ, ஏதிலார்நகை சூழ, துஞ்சின மறமுஞ் சூழ சோழன் உடைந்து முதுகிட்டான்.

வில்லும் வேலும் தாங்கிவந்த வேடன் தென்னவனின் மலர் முகச் செவ்வி பார்த்து இருளில் நிலவு தோன்றினாற்போல் சிறிதே புன்முறுவல் பூத்து செல்லொடு (மேகத்தைவிடக் கரிய) பகைத்த தன் திருவுருக் கரந்துபோனான். செழியனும் சங்கெடுத்தூதி தன் வெற்றியை வெளிப்படுத்தினான்.

சிலைவிற் சேவகஞ் செய்து வாகை வாங்கித் திருவளித்த செம்மலுக்கு மேருமலை போன்ற வில்லொன்றையும் சுந்தரேசன் என்ற நாமமெழுதிய கணையொன்றையும் செய்து சார்த்தித் தன் நன்றியைத் தெரிவித்துக்கொண்டான். பின் பன்னெடுங்காலம் பகை விலக்கிப் பாரளித்திருந்தான் வங்கிய சேகரன்.

(வளரும்)

திருவாரூர் சித்தீச்சுரம்

புலவர்மணி,
வித்துவான், திரு. மு. இரத்தின தேசிகர்

சித்தீச்சுரம் தோற்றம் :

" சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள் "

என்பது 'இன்னாசெய்யாமை, என்ற அதிகாரத்தில், முதற் கண் திருவள்ளுவ தேவரால் அமைக்கப்பெற்ற திருக்குறளாகும். இதற்குப் பரிமேலழகர் வரைந்துள்ள உரை பின் வருமாறு :

" சிறப்பு ஈனும் செல்வம் பெறினும் - யோகமாகிய சிறப் பானது தருகின்ற அணிமா முதலிய செல்வங்களைப் பிறருக்கு இன்னாசெய்து பெறலாமாயினும், பிறர்க்கு இன்னாசெய்யாமை மாசற்றார் கோள் - அதனைச்செய்யாமை ஆகமங்கள் கூறிய வாற்றால் மனந்தூயாரது துணிபு. அணிமா முதலிய செல்வங் கள் - அட்டமா சித்திகள். அவை; அணிமா, மகிமை, கிரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்ற எட்டுமாகும். இக்குறளுக்குப் பரிமேலழகர் எழுதியுள்ள உரை யின் ஆழம் அளவிடற்கரியது. இதனால் நாம் அறியும் உண்மை, யோகத்தால் அட்டமா சித்திகளையும் பெறலாம் 'என்பதாகும். இச்சித்திகள் சிந்தை யடக்கத்திற்குத் துணை செய்யா என்ற உண்மையினை,

" கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம் "

என்ற பாடலில், " சிந்தையை அடக்கியே சும்மாயிருக்கின்ற திறமரிது " என்று தாயுமான அடிகள் கூறியுள்ளமையால் நன்கு உணரலாம்.

பண்டு, அம்சன் என்ற ஓரரசன் இவ்வவனியைச் செங் கோல் கோடாது ஆண்டு வந்தான். அவன் இறையன்பு மிக்க வன், வேள்விகள் பல செய்தவன். முத்திக்கு வித்தாயதும், வேதத்தின் முடிபாயுள்ளதுமான திருவைந்தெழுத்தை நன்கு

உணர்ந்து யோகங்கள் பலவற்றைச்செய்து எல்லாச் சித்திகளும் கைவரப்பெற்றவன். அதனால் சித்தீச்சுரன் என்ற பெயரைப் பெற்ருன். ஆனுல் அவன் சித்தம் அடங்கவில்லை.

அறிவறிந்த மகப்பேறில்லாக் குறையொன்று அவன் உள்ளத்தை உறுத்திக்கொண்டேயிருந்தது. தேவர் குருவை அடைந்து, தன் துயரைக்கூறி அது தீரவழி கூறுமாறு வேண்டி ஞன். தேவர் குரு "அரசே நீ ஆருரை அடைந்து புற்றரவக் கச்சார்த்த புனிதனைப் போற்றித் தனியாயோர் சிவலிங்கத்தினைத் தாபித்து விதிவழிப் பூசை செய்யின் மகப்பேறு எய்தலாம்" என்று கூறியருளினன். அம்சனும் அவ்வாறே ஆருரை அடைந்து தேவ தீர்த்தத்தில் முழுகித் திருவைந்தெழுத்தை ஓதித் திருநீறணிந்து புற்றிடங்கொண்ட புண்ணியனைப்போற்றி இப்புண்ணியனது கோயிலுக்கு வடகீழ்பால் சிவலிங்கத்தைத் தாபித்து ஆயிரம் ஆண்டுகள் அன்பொடும் பூசித்தான். இறை வன் உமையம்மையுடன் இடபவாகனத்துத்தோன்றி, வேண்டும் வரம் யாது என வினவினன். அரசன் புத்திரப்பேறு வேண்டிய துடன், தான் தாபித்த இலிங்கத்தில் என்றும் இருந்து வழி படுவோருக்கு அருள்பாலிக்க வேண்டினன். இறைவனும் அவ்வாறே வரமீந்து மறைந்தான். அரசனும் புத்திரப்பேறெய்தி வாழ்ந்து இறைவனடியை அடைந்தான். இவ்வாறு சித்தீச்சுரன் என்ற பெயர்தாங்கிய அரசனல் நிறுவப்பெற்றமையால் இக் கோயில் சித்தீச்சுரம் எனப் பெயர்பெற்றது.

இக்கோயில் மேற்கு நோக்கிய வாயிலையுடையது. கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், என்ற அமைப்புக்கள் உள்ளன. மகாமண்டபத்தின் தென்கீழ் மூலையில் உயர்ந்த பைரவரது திருஉருவமும், சண்டிகேஸ்வரரது உருவமும் அமைந்துள்ளன. தனி அம்பிகை உருவோ போகசத்தியோ இல்லை. இக்கோயிலின் தென்பகுதியில் மேதாதட்சிணமூர்த்தி யின் திருவுரு கண்டாரை வயப்படுத்தும் புன்னகை பூத்த முகத் துடன் விளங்குகின்றது,

இந்தச் சித்தீச்சுரத்தின் தெற்குப்பக்கத்தில் இருந்து (தட்சிணமூர்த்தியின் திருமுன் அமர்ந்து) இறைவனுக்குரிய ஆறெழுத்தாலாகிய மகாமந்திரத்தை 'அக்குமாலைகொடு அங்கை யில் எண்ணினல், அட்டமாசித்திகளும் கைவரும். வேறு வரங் களும் கிட்டும் என்று தலபுராணம் கூறுகின்றது.

"ஈறில்இத்திரு மூர்த்திதன் கோயிலின்
தென்திசை இருந்தீசன்
ஆறெழுத்துமா மந்திரம் எண்ணிடில்
அட்ட சித்தியு மன்றி
வேறுளத்தினில் வேண்டிய வரங்களும்
வேண்டியபடி எய்தும்
கூறுதற்கரு மாதவ முனிவர்காள்
கூறுமிம்மொழி வாய்மை",

(திரு - புரா - சித்தீ - செ - 19)

இச்செய்யுளில் சுட்டப்பெறும் "ஈசன் ஆறெழுத்து மாமந்திரம்" என்பது பிரணவத்துடன் கூடிய திருவைந்தெழுத்தைக் குறிப்பதாகும்.

சித்தீச்சுரமும் வத்ஸமுனிவரும் :

முன்னொரு காலத்தில் சித்தீச்சுரத்தே திருவிழா வொன்று நடந்தது. இதனைக்காணப் பெருந்தவத்தவர் பலர் வந்து கூடினர். களிப்புமிகுதியால் ஒரு அந்தணச் சிறுவன் ஒரு நீர்ப்பாம்பை அத்தவத்தோரது கூட்டத்தில் விடுத்தான். அப் பாம்பு யோகத்திருந்த ஒரு முனிவர்மீது விழுந்தது. அவரது பக்கத்திலிருந்த மற்றொரு முனிவர் அவ்வந்தணச் சிறுவனை நீர்ப்பாம்பாகுமாறு சபித்தார். அவனும் அவ்வாறே ஆயினன். யோகம் நீங்கி எழுந்த முனிவர், நிகழ்ந்ததை அறிந்து வருந்தினர். அந்தணச் சிறுவனுக்கு இறைவனது ஆறெழுத்து மந்திரத்தைச் சித்தீச்சுரத்திருந்து உபதேசித்து, "நீ நீருட்கிடந்து இதனைச் செபித்துக்கொண்டிரு; வத்ஸ முனிவரை நீ காணும்பொழுது நற்கதிபெறுவாய்" என்று கூறி விடுத்தனர். அந்தணச் சிறுவனும் நீர்ப்பாம்பாய் நீருட் கிடந்து இறைவன் ஆறெழுத்து மந்திரத்தை உச்சரித்துக்கொண்டிருந்தான்.

இது நிற்க, காமிகவனத்தில் தேவநாதன் என்ற முனிவன் தவம் புரிந்தான். ஒரு குளக்கரையில் மேனகையைக் கண்டு காமுற்றான். வீரியத்தை நீருள் விடுத்தான். அதனை நீருடன் பருகிய பெண்மான் ஒரு பெண்மகவினை ஈன்றது. தேவநாதன் அப்பெண்மகவினை வளர்த்து, மிருகாவதியெனப் பெயரிட்டான். மங்கைப் பருவமெய்திய மிருகாவதியை, முனிகுமாரனாகிய வத்ஸன் என்பான் காதலித்தான். இருவரும் தேவநாதனது உடன்பாட்டின்படி மணம் புரிந்துகொண்டனர். இருவரும் ஒரு தவவனத்தே இறைநெறியில் வாழ்ந்தனர். ஒரு நாள் மலர்

கொய்யச் சென்ற மிருகாவதி பாம்புகடித்து இறந்தாள். வத்ஸன் அன்றுமுதல் பாம்புக்குலத்தை வேரறுக்கத் தொடங்கினன். வத்ஸன் திருவாரூரை அடைந்தபொழுது நீர்ப்பாம்பாய்க் கிடந்த அந்தணச் சிறுவன் அவனைக்கண்டான். சாபம் நீங்கித் தேவஉரு அடைந்தான். அந்தணச் சிறுவனின் முன்னைய வரலாற்றினைக் கேட்டறிந்த வத்ஸன் வியப்பெய்தினன். தேவ உருவெய்திய அந்தணச் சிறுவனிடத்தில் இறைவனது ஆறெழுத்து மந்திரத்தை உபதேசம்பெற்ற வத்ஸன், சித்தீச்சுரத்து இறைவன் முன்பிருந்து இம்மந்திரத்தைச் செபித்து அட்டமா சித்திகளும் கைவரப்பெற்றான். இந்த வரலாறுகளால் நாம் அறியும் பேருண்மை, பிரணவத்துடன் திருவைந்தெழுத்தினைத் திருவாரூர்ச்சித்தீசன் திருமுன்பு செபித்துவரின் எல்லாச் சித்திகளையும் இம்மையில் எய்தி மறுமையில் விடெய்தலாம் என்பதாகும்.

சித்தீச்சுரமும் குருஞானசம்பந்தரும் :

கி. பி. பதினாறும் நூற்றாண்டின் பிற்பகுதியில் சைவாச்சாரியர் மரபில் தோன்றிய கமலை ஞானப்பிரகாசர் திருவாரூரில் வாழ்ந்து வந்தார். இவரது இயற்பெயர் சிதம்பரநாதன் என்பது. மாசிலாமணி என்ற மற்றொரு பெயரும் இவருக்கு உண்டு. இல்லறத்தை மேற்கொண்டு ஒழுகிய இவரது உள்ளம் இறைவன் திருவருள் ஒன்றையே நாடி நின்றது. தியாகராஜப்பெருமானது திருவருளின்படி இவர் சித்தீச்சுரத்தை அடைந்து திருவைந்தெழுத்தை நியமமாக ஓதிவந்தார். ஒருநாள் இறைவன் அசரீரியாக "இனி நீ ஞானப்பிரகாசன் எனப் பெயர் பெறுவாய்" என்று கூறியருளினர்.

தருமை ஆதீன முதற் குரவராய குருஞானசம்பந்தர் சிவில்லிபுத்தூரில் அவதரித்தருளினர். மதுரையை அடைந்து சொக்கநாதப்பெருமானையும் அங்கயற்கண் அம்மையையும் வணங்கிச் சொக்கநாதப்பெருமானைப் பூசைக்குரிய மூர்த்தியாகப் பெற்றார். இறைவன் திருமுன்பு தனக்கு உபதேச குருவாக ஒரு ஞானசிரியரை நல்கவேண்டினர். அவரது கனவில் இறைவன் தோன்றி "ஆரூரிலே நமது பரம்பரையில் உபதேசம்பெற்ற ஞானப்பிரகாசனை அடைந்து உபதேசம் பெறுக" எனக்கூறி; ஞானப்பிரகாசரது கனவிலும், குருஞானசம்பந்தரது வருகையை உணர்த்தினர்.

குருஞானசம்பந்தர் திருவாரூரை அடைந்தபொழுது ஞானப்பிரகாசர் சித்தீச்சுரம் தெட்சிணமூர்த்தியின் முன் நிட்டை கூடி

யிருந்தார். சீடரது வருகை உணர்ந்து அவருக்கு ஞான உபதேசம் செய்தார். குருதேவரிடம் பேரன்பு பூண்டு ஒழுகிய குருஞானசம்பந்தரின் அதீத நிலையைக்கண்ட கமலை ஞானப் பிரகாசர் "இனி நீ தருமையை அடைந்து, குருபரம்பரை செழித்து ஓங்கப் பிறருக்கு உபதேசம் செய்து சிவானுபூதியில் திளைத்திருப்பாயாக" என்று கூறியருளினர். குருஞானசம்பந்தர் அன்று தருமையம்பதியில் ஊன்றிய ஞானவித்து இன்று பெரும் மரமாய்ச் செழித்தோங்கிச் சிவானந்தக்கனியைப் பலரும் உண்டு மகிழத் தந்து நிற்கின்றது.

குருஞானசம்பந்தப்பெருமான் அன்று தாம் சித்தீச்சுரத்துப் பெற்ற உண்மையினைச் சிவபோக சாரமாக நமக்குப் பொழிந்திருக்கின்றார். எடுத்த எடுப்பிலேயே,

" சித்தி தருநாதன் தென்கமலை வாழ்நாதன்
பத்தி தருநாதன் பரநாதன் — முத்திப்
பெருநாதன் ஞானப் பிரகாச னுண்மை
தருநாதன் நங்குருநா தன் "

என்று பாடி, தான் சித்தீச்சுரத்துப் பெற்றவை சித்தியும்-முத்தியுமே என்பதைப் புலப்படுத்தியுள்ளார். அவர் வழி நாமும் ஆரூர் சித்தீச்சுரம் அடைந்து உய்வோமாக.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

It is with great respect and previlege that I have been treated with by the Trustees. I am even greateful to them. I wish them all the best in their endeavour.

With sincere respects and regards.

(Sd) M. A. M. Ramaswamy

6—3—72. Sheriff of Madras.

வாழ்த்தும் அஞ்சலியும்

தி. செ. முருகதாச ஐயா, கௌமார மடாலயம்,
திருவாமாத்தூர், விழுப்புரம்.

தோத்திரப் பாடல்கள்

அறுசீர் விருத்தங்கள்

திருத்தரும புரமடத்தின் ஆதீன
    முதல்வ ரெனத் திகழ்ந்து சைவ
உருத்தயங்க வருங்கயிலைக் குருமணியே
    தவமணியே உயர்பீடத்தின்
கருத்தரெனச் சிவமூர்த்தம் இருபத்தைந்
    தாமென்னும் கணக்கிற் பட்டம்
பொருத்தமுறப் பெற்றவிர்ந்த பெருமரபு
    தழைக்கவுற்ற புனித மூர்த்தி. 1

குருஞான சம்பந்தப் பெரியோன் றன்
    திருமரபாக் குலவும் சைவப்
பெருஞான சம்பந்தத் தருமைஆ
    தீனத்திற் பிறங்கிக் காழித்
திருஞான சம்பந்தர் திருமுறையா
    திய அச்சிற் செய்து நல்கி
வருஞான சம்பந்த சுப்ரமண்ய
    தேசிகநும் மலர்த்தாள் போற்றி. 2

வானிலவும் உடுத்தொகைபோல் இருபத்தேழ்
    சிவனுறையும் மாணூர் கோயிற்
பானிலவு திருப்பணிகள் கும்பாபி
    டேகமிவை பரிவாற் செய்தீர்
வேனிலவு திருக்கரத்து முத்துக்கு
    மாரனுறை வேளூ ரோடு
சேனிலவு கண்கொளபி ராமியுறை
    கடவூரும் சிறப்பாக் கொண்டீர். 3

தேவாரம் முதலான திருமுறைக்கு விரிவுரைகள்
    செய்வித் தன்பர்
நாவாரத் துதிப்ப தொடு பொருளுமுணர்
    தரப் பதித்து நவிலும் அன்பர்

நாவாரத் தனைபேரும் கொள மிகவும்
குறைந்தவிலைக் கருளும் பண்பீர்
சேவாரக் கொளும்பரமன் திருவடித்தா
மரைமலரிற் சேர்ந்தீர் மாதோ. 4

காசினியிற் சிவன்வாழும் திருத்தலங்கள்
அத்தனைக்கும் கங்கை ஓடும்
காசிமிகப் பெரிதென்பர், அத்தலத்தி
லிறக்கின்முத்தி காணு மென்று
பேசிஅவண் உறைவர்பலர் நீவிர்வழி
பாடுசெயப் பேணிச் செல்கால்
மாசிலிறை வன்றனிரு கழல்புகுந்த
மாட்சிஎவர் வகுப்பா ரம்மா. ௫

சிவதலங்கள் எல்லாமும் சென்றுசென்று
வழிபட்ட சிறப்புப் பெற்றீர்
பவமகற்றும் கேதார முதலாகக்
கடும்பனிபெய் பருப்பதங்கள்
எவருமெளிதினி லேகாத் திருக்கயிலை
சென்றுபணி ஏற்றம் தோய்ந்த
தவமணியே குருமணியே கயிலைமணி
யேதருமைத் தலைமைத் தேவே. 6

தெய்விகப்பே ரவையதனில் மூன்ருண்டு
தலைவ ரெனச் சிறப்புச்செய்தீர்
மெய்மாட்சிச் சைவமுடன் தமிழ்விளங்கப்
பிரச்சாரம் மிகச்செய் வித்தீர்
பொய்மாசார் புறச்சமய மங்கஅருட்
சைவ நன்னூல் புதுக்கி யிந்தீர்
உய்மாந்த ராமன்பர் புகழநும்சீர்
உலகிலென்றும் ஒளிர்க மாதோ. 7

வெண்பா

தருமை ஆதீனத் தலைமைக் குருவாம்
பெருமை தனையின்று பெற்று — அருமையுறும்
சண்முக தேசிகராம் தக்கதீட் சாநாமம்
கொண்முதல்வர் வாழ்க குளிர்ந்து.

ஏ. வி. அளகேசன் 3, Sunehri Bagh Road,
New Delhi
17—11—71.

தருமபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு அநேக நமஸ்காரம்,

தாங்கள் புதிதாகப் பட்டமேற்று தருமபுர ஆதீனத் தலைமை குருமகாபீடத்தை அலங்கரிப்பது அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இறைவன் திருவருளால் தாங்கள் நீண்டகாலம் அப்பீடத்தில் வீற்றிருந்து அருட்செங்கோல் செலுத்தி சைவ நெறியும், தமிழ் மரபும் தழைக்க வழி செய்வீர்கள் என்று நம்புகிறேன். தங்களுடைய ஆட்சிக் காலத்தில் தமிழும் சைவ சித்தாந்தச் செந்நெறியும் வடநாட்டிலும், மேற்கு நாடுகளிலும், ஏன்? கிழக்கு நாடுகளிலும்கூட பரவும் என்று எண்ணுகிறேன். தங்களுடைய பரந்த உலக அனுபவமும் எல்லையில்லாத இறைவன் திருவருளும் தங்களுடைய தெய்விகப் பணிகளுக்குத் துணை நிற்கும் என்பது எனது துணிபு.

பழைய மகாசந்நிதானத்தை 28—9—71 அன்று தரிசித்து அளவளாவும் இன்பம் பெற்றேன். அவர்கள் காசிக்குச் சென்று ஸ்ரீ விசுவநாதப்பெருமானைப் பூசிக்கும் நிலையில் இறைவன் திருவடி நிழலில் இரண்டறக் கலந்தது அவர்களுடைய அருள் வாழ்க்கைக்கு ஓர் அதிசயமான சான்றாகும். "பேறினி இதன் மேலுண்டோ" என்று வியப்பு மேலாடுகிறது.

A. SRINIVASA RAGHAVAN Tuticorin-3
19—11—71.

தருமை ஆதீனம் குருமகாசந்நிதானத்தின் திருவடிகளிற் பணிந்து, சீநிவாசராகவன் வணக்கத்தோடு செய்யும் விண்ணப்பம்.

இன்று காலையில் அங்கே நடைபெறும் குருபூசையிலும், இரவில் நடைபெறும் பட்டினப்பிரவேச வைபவத்திலும் கலந்து கொள்ளும் பேறு தமியேனுக்குக்கிட்டவில்லை. இப்பெரு நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்தி நேற்றிரவே கிடைத்தது. ஆகவே வருவதற்கு வழியில்லாமற் போயிற்று மன்னித்தருள வேண்டுகிறேன். கூடிய விரைவில் தருமைக்கு வந்து தரிசித்துக் கொள்கிறேன்.

சொக்கலிங்கப்பெருமான் அருளால் மகாசந்நிதானத்தின் அருளாட்சி எல்லா வகையிலும் சிறப்புற்று விளங்குவதாக!

SAW. GANESAN M. L. C. Karaikudi-1 (S. India)
13—11—71.

தருமை ஆதீன ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கட்கு வணக்கம்;

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் விதேக முத்தியடைந்தது செந்தமிழ்ச் சொக்கன் திருவுளமிருந்தவாறிதுபோலும்!

ஆலயத்திருப்பணிகளிலும், ஆலயவழிபாடுகளிலும், ஆலயத் தூய்மையிலும் பேரார்வம் கொண்டு அவர்கள் ஆற்றிய பெரும் பணி ஈடும் எடுப்பும் அற்றதாகும். சைவமும் தமிழுமே இரு கண்கள் என்று நம்பியதைச் செயலிற் காட்டிய திருவருட் செல்வ ராய்த் திகழ்ந்தார்கள். சிவனடி மறவாச் சிந்தையராகிய அவர் கள் காசியம்பதியில் அவனடி நீழலில் அமரும்பேற்றை எய்தியது பெருஞ் சிறப்பு.

அரும்பணி பல ஆற்றி அனைவர்க்கும் மகிழ்வளித்துக் கொண்டிருந்த பெருந்திறல் குருமூர்த்தி நாமம் வாழ்க!

அ. கிருஷ்ணசாமி வாண்டையார் பூண்டி
19—11—1971.

தருமபுரம் திருக்கயிலாய பரம்பரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்குத் தண்டனிட்ட விண்ணப்பம்.

எங்கள் குடும்ப குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் பரமுத்தி அடைந்ததைச் சில நாட்களுக்கு முன்பு தான் அறிய நேர்ந்தது, கடந்த ஆறுமாத காலமாக வேலூரிலும், சென்னையிலும் தங்கி வைத்தியர்களிடம் சிகிச்சை பெற்றுத்திரும்பியபடியால் இந்தப் பேரிடியை காலத்தில் தெரிந்துகொள்ள வாய்பில்லாமல் போய்விட்டது. எங்கள் குடும்பத்தில் மகாசந்நிதானம் வைத்திருந்த தனிப்பட்ட பற்றும், பாசமும் யாவரும் அறிந்த விஷயம். அவர்களுடைய மறைவு எங்களுடைய குடும்பத்திற்கு ஈடுசெய்ய முடியாத நஷ்டம். இந்துமதம் நிகரற்ற அறநிலைய நிர்வாகியையும், மகத்தான மத சிரேஷ்டரையும், இழந்துவிட்டது என்று சொன்னால் அது மிகையாகாது. நேரில் வந்து எனது அனுதாபத்தைத் தெரிவித் துக் கொள்ளவேண்டியது எனது கடமை. ஆனால் உடல் நிலைமை அவ்விதம் செய்ய இயலவில்லை. தயவு செய்து மன்னித் தருளவேண்டும். சீக்கிரமே நேரில் வந்து தெரிசித்துக் கொள் கிறேன்.

N. KRISHNAN

Madras - 2.
13—11—71

அன்றைய இந்து பத்திரிகை இதழில், தாங்கள் திருக் கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன ஞானபீடத்தில் இருபத்து ஆறுவது குருமகாசந்நிதானமாகப் பதவி ஏற்கப்போகும் நற் செய்தியைக்கண்டு, மட்டற்ற மகிழ்ச்சியில், சிவன் அடியார் தொண்டன் டன்லப் கிருஷ்ணன், இதயம் கலந்த நல்வாழ்த்துக் களைத் தெரிவிக்க விரைகின்றேன்.

தாங்கள் சென்னை தருமையாதீன பிரசார நிலயத்தலைவராகி இருந்த காலத்து செய்துவந்த போற்றற்கரிய பல திறப்பட்ட சமயத் திருப்பணிகளை இன்றைய தமிழ் கூறும் நல்லுலகம் நன் கறியும். அச்சீரிய பணியை இன்னும் தீவிரமாக, தேசகால சூழ்நிலைக்கேற்ப, தாங்கள், மேலும் மேலும் அறப்பணிகள் பலவும் புரிந்து, இந்து சமயத்தின் தூணாகத் தொடர்ந்து பல்லாண்டு விளங்கிவர, எல்லாம்வல்ல திருச்சிற்றம்பலவனை இறைஞ்சுகின்றேன்.

அ. மு. பரமசிவாநந்தம்

தமிழ்க்கலை இல்லம்,
சென்னை 30.
15—11—71.

அருட்டிரு அடிகளார் திருமுன்பிற்கு,

வணக்கம் பல. தாங்கள் நம் ஆதீனத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றமை அறிந்து மகிழ்ந்தேன். இறையருளால் தங்கள்பணி மிகச் செம்மையாக வளர்ந்து நாட்டுக்கு நலம் பயக்கும் என்பது உறுதி. அறிவறிந்த தங்கள் அருளாணையின் கீழ் உலகெலாம் அன்பும் இன்பும் மலரும் என நம்புகின்றேன். தெய்வநெறி ஓம்பும் தங்கள் நல் உள்ளத்தின் வழியே தோன்றும் அருள் ஒளி உலகை உய்வித்து நலம் விளைத்து நனிசிறக்க இறையருள் காட்டும். தங்கள் பணிகள் தழைப்பனவாக.

தருமையாதீனத் திருமடத்தில்

ஆதீன சிஷ்யர்களான
ஆடூர் பாக்கியப் பஞ்சுக்கார செட்டியார்கள்

குரு வழிபாடு

தருமையாதீனத் திருமடத்தில் அண்மையில் ஞானபீடமேறிய 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளுக்கு ஆதீன சிஷ்யர்களாகிய ஆடூர்ப் பாக்கியப் பஞ்சுக்காரச் செட்டியார்கள் 19—3—72 ஞாயிற்றுக்கிழமையன்று சிறப்பாகக்குருவழிபாடு நிகழ்த்திக் குருவருள் பெற்றனர்.

காலையில் தருமையாதீன ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கநாதப் பெருமான், ஆதீனக்குரு முதல்வர் ஸ்ரீகுருஞான சம்பந்தர் ஸ்ரீ தருமபுரீசுவரர், ஸ்ரீ துர்க்காபரமேசுவரி, முதலிய இறையவர் திருமேனிகளுக்கு விழாக்குழுவினர் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தினர்.

பின்னர், காலை 11 மணி அளவில் ஆதீனப்பண்டாரக்கட்டில் குருவழிபாட்டு நிகழ்ச்சி தொடங்கிற்று. பூ, பழம், கற்கண்டு போன்ற மங்கலப் பொருட்களை பெண்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் முன் வைத்து வணங்கித் திருநீறு பெற்றனர்,

காட்டுமன்னார்குடி திரு. சு. சோமசுந்தரஞ்செட்டியார் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திற்குப் பொன்னாடை போர்த்தியபின் மாயூரம் திரு, சபாபதிச்செட்டியார் சிவசங்கரஞ் செட்டியார் முதலியோர் மாலை அணிவித்தனர். மாயூரம் வழக்குரைஞர் திரு. பாஸ்கரன் விழாக் குழுவினரின் சார்பில் பாராட்டுப் பணிவுமலர் ஒன்றைப் படித்தளித்தார். காட்டுமன்னார்குடி திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார் சார்பில் பண்புநலம் போற்றிப் பாமலர் ஒன்றை விருத்தாசலம் திரு. இரத்தினசபாபதிச் செட்டியார் படித்தளித்தார். விழாக்குழுவின் சார்பில் வெள்ளியில் செய்யப் பெற்ற அப்பர் பெருமான் திருவுருவம் ஒன்று, காட்டுமன்னார்குடி துரைசாமி செட்டியாரால் அளிக்கப்பெற்றது. விருத்தாசலம் திரு. இரத்தினசபாபதிச் செட்டியார் அனைவரையும் அறிமுகப் படுத்திப் பேசும்போது,

“ தருமை அருள் ஞானப்பண்ணை; குருவருளே திருவருள் அறுபரத்தொருவன்என்றதிருவாசகப்பதியில்குருவருளின்சிறப்பு பேசப்படுகிறது, ஸ்ரீ மெய்கண்டாரும் ‘ஐம்புல வேடரின்’ என்ற சூத்திரத்துள் குருவருளைச் சிறப்பிக்கிறார். ஸ்ரீ குருஞான சம்பந்தப்பெருமானின் சிறப்பிற்குக் கமலை ஞானப்ரகாசரும் ஸ்ரீ குமரகுருபரரின் பெருமைக்கு ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகரும் குருவாக அமைந்ததே அடிப்படையாகும். நாமெல்லாம் ஆதீன சிஷ்யர்களாக இருப்பது நம் புண்யம்; பெறும்பேறு; நம் முன்னோர் செய்த தவம்; நாம் அனைவரும் இந்த ஞானபீடத்தில் உபதேசம் பெற்று நம் ஆன்மா கடைத்தேற முயலவேண்டும். நமக்கெல்லாம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் குருவருள் எப்போதும் உண்டு. ஆண்டுதோறும் இவ்வாறு ஒன்றுகூடி நாம் குருவழிபாடு நிகழ்த்தி உய்வோம் ” என்று குறிப்பிட்டார்

காட்டுமன்னார்குடி திரு. துரைசாமிசெட்டியார் ஆடூர்பாக்கியச் செட்டியார்கள் இன்றுமுதல் புதிய பாக்கியம் பெற்றோம் எனக் குறிப்பிட்டார்.

சீகாழி தாசில்தார் திரு. எம், இராஜமாணிக்கஞ் செட்டியார் இன்றுமுதல் ஆண்டுதோறும் ஒருமுறை இங்கே நாம் கூடி குருவருள் பெற்று, நாள்தோறும் ஒரு நிமிடமாவது குருவை நினைந்து, திருநீறு அணிந்து, சிவாயநம என உச்சரித்து உய்தி பெற முயல்வோம் என்று குறிப்பிட்டார்.

அடுத்து மாயூரம், கயிலைக் கந்தசாமிச் செட்டியார் ‘இன்று நம்மையெல்லாம் ஒன்றுபடுத்திய பெருமை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்திற்கே உரியது. குருவருளும் திருவருளும் நம்மிடையே இணைந்து நிற்கவேண்டுகின்றேன்’ எனக்குறிப்பிட்டார்.

காரைக்கால் சப் ஜட்ஜ் திரு மு. கோவிந்தராஜன் பேசுகையில் “ குருவருள் வழி ஒழுகி, மனிதப் பிறவியின் பயனைப் பெற விரும்புகின்றேன். 15 ஆண்டுகளுக்கு முன்வரை திருவருளை நினைத்ததில்லை; அரசியலும் சூழ்நிலையும் அவ்வாறு என்னை ஆக்கின. நீதிபதி திரு. எஸ். மகாராஜன் அவர்களாலும், மற்றும் சில பெரியவர்களாலும் சமயத்துறையில் ஈர்க்கப்பெற்று, பின் வேகமாக ஈடுபடலானேன். நான் தொடங்கிய வாழ்வுவேறு; இப்பணியில் என்னை ஈடுபடுத்தியது ஒரு சக்தி. தாயின்சக்தியால் கருவிருந்து வளர்ந்து பின்னர் தானே வளர்வது போல குருவின் உபதேசித்தால் ஞானம்பெற்று, பின் நாமே ஞானநெறி தலைப்பட்டு வளரவேண்டும் ” எனக்குறிப்பிட்டார்.

மகாவித்துவான். திரு, ச. தண்டபாணிதேசிகர் பேசுகையில் " ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஆணை இயக்கும் வழி இயங்கக் கடமைப்பட்டவர்கள் நாம் என்பதனை இக் கூட்டம் விளக்குகிறது. குரு - சீடர் தொடர்பினை காலத்தால் வரையறுக்க முடியாது ! என்று சிவமுண்டோ, என்று ஆசானுண்டோ, என்று ஆன்மா உண்டோ அன்றே இக்குரு - சீடரிணைப்பும் உண்டு. தடிப்பான குணத்தின் தடையில்லாத ஆற்றல் மறைப்பு. இதனை நீக்குபவன் ஆசாரியன். உயிர் உய்தி பெறத் திருவைந்தெழுத்தை உணர்ந்து ஓதி, ஞானபீடத்தின் நலம் பேணி, உபதேசம் பெற்று, ஆண்டுதோறும் இங்கே கூடி நலம்பெற வேண்டும், குழந்தைகளுக்கு ஏழுவயது ஆனதும் சமயதீக்ஷை பெறவேண்டும். சடங்கின் மூலம் அனுபவம்வளரும் ஞான இணைப்போடு இருந்தால் நாடும் வாழும்! நாமும் வாழலாம் என்று குறிப்பிட்டார்.

அடுத்து திரு. மு. அருணசலம் பேசுகையில் " ஒருஇன அடியார் இவ்வளவுபேர் இருப்பது மகிழ்ச்சிக்குரியது. தேவாரப் பாடல்களில் சில பாடல்களையாவது தினம் பாடும் பழக்கம் பெற வேண்டும். சைவம், விபூதி இடுவார்க்கு என்பது மட்டுமல்ல; அன்பேசிவம் என்பதே சைவம் : அப்பாலும் அடிச்சார்ந்தார் என சுந்தரர் குறிப்பது இதுகருதியேயாகும். அடியார்கள் வேண்டுவதையே ஆண்டவனும் வேண்டுவான். அப்பர் பெருமான் திரு மாற்பேறு பதிகத்தில் மெய்யடியார் வேண்டுவதேவேண்டுவானை எனக் குறிப்பார். ஈசனுக்கு அன்பிலாதவர் அடியவர்க்கு அன்பிலார் எவ்வுயிர்க்கும் அன்பிலார் - தமக்கும் அன்பிலார் என்பர் அருணந்திசிவம். எனவே, இறைவன் திருவடிகளில் அன்பு வைத்து உய்வோம் '' என்றார்.

இறுதியாக, தருமையாதீனத்தின் சார்பில் வித்துவான், ஸ்ரீமத். மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் " ஞானத்தைக் குருவருளின்றிப் பெற முடியாது. விடுபேறு ஞானசாரியன் அருளின்றிக் கிட்டாது. நீங்கள் எல்லாம் இந்நெறி அறிந்து இங்கே ஒன்று கூடிய பாக்கியம்பெற்றவர்கள். மனிதப்பிறவியின் பயன் சிவனருள் பெறுவதேயாகும். சூரிய ஒளியும் பஞ்சும் இருந்தாலும், சூரியகாந்தக் கல்இருந்தால்தான் பஞ்சுபற்றும், சூரியகாந்தக்கல்போன்ற ஞான ஆசாரியனே திருவருளை உயிர்களுக்கு வழங்குவான்

குருவருள், பார்வை, சிந்தனை, ஸ்பரிசம் என்பனவற்றால் மாணாக்கனுக்குக் கிடைக்கும். இதனை நயனதீட்சை, மானச

தீட்சை ஸ்பரிசதீட்சை எனக்குறிப்பர். உலகியலில் கசப்பும் வெறுப்பும்கொண்டு, வீடுபேற்றில் ஆசைகொள்பவர் அதிதீவிர பக்குவிகளாவர். இவ்வாதீன இரண்டாவது குருமூர்த்திகள் ஸ்ரீ ஆனந்தபரவசர் பக்குவம்பெற்று ஞானபீடமேறிய உடனேயே சமாதி கூடிய அருளாளர். இந்த ஞானபரம்பரையும் இதன் நல்ல சீடர்களும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தோங்கத் திருவருளைப் பிரார்த்தித்து உங்கள் அனைவரையும் வரவேற்கிறேன் எனக்குறிப்பிட்டார்கள்.

பக்தர்கள் பணிவுரைக்குப் பின்னர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திரண்டிருந்த அன்பர்களுக்கு ஆசியுரை அருளினார்கள்.

குருவழிபாட்டிற்குப்பின் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கியருளினார்கள். நண்பகல் மாகேசுவரபூஜை சிறப்பாக நடந்தேறியது.

அன்றிரவு 8-30 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் திருஇந்தளூர் ஸ்ரீ தான்தோன்றீசுவரர் திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். கோயில் வாசலில் பூரணகும்ப மரியாதைகளுடன் - வாண வேடிக்கைகளுடன் வரவேற்றனர்.

வழிபாட்டிற்கு பிறகு நிகழ்ந்த வரவேற்பில் அன்பர்கள் பலரும் கலந்துகொண்டனர். திருஇந்தளூர் திரு. சுப்பிரமணிய செட்டியார் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்தார்கள்.

திருஇந்தளூர் ஆசிரியர் திரு. சம்பந்தம் அனைவரையும் வரவேற்றார். இந்தளூர் சைவ-நல்லன்பர்கள் சார்பில் திரு. சபாபதி செட்டியார் வரவேற்பு நன்மலர் படித்தளித்தார்.

சிதம்பரம் அறப்பணிச்செல்வர் டாக்டர். திரு. கே. அரங்கசாமிப் பிள்ளை சிறப்புரையாற்றினார்கள்.

இறுதியாக ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் திரண்டிருந்த அன்பர்களுக்கு ஆசியுரை வழங்கிய பின்னர் விழா இரவு மணி 10-30 அளவில் இனிதே நிறைவுற்றது.

செய்திகள்

தருமையாதீனத் திருக்கோயில்களில்
பங்குனிப் பெருவிழா

வைத்தீசுவரன்கோயில்

ஸ்ரீ வாலாம்பிகை சமேத ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் பங்குனிப்பெருவிழா 20—3—72 முதல் 2—4—72 முடிய மிகச் சிறப்பாக நடந்தேறியது. திருவிழாவை ஒட்டி சமயச் சொற்பொழிவுகளும், திருமுறைவிழாவும் நிகழ்ந்தன. பங்குனி 11ஆம் நாள் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி, ஸ்ரீ வைத்தியநாதசுவாமியைப் பூசித்துச் செண்டுபெறும் விழாவும், 12, 13, 14ஆம் நாட்களில் தேர்த்திருவிழாவும், 16ஆம் நாள் புதன்கிழமை, பஞ்சமூர்த்திகளும் எழுந்தருளி சித்தாமிர்த தீர்த்தத்தில் ருத்ரபாத தீர்த்தம் கொடுத்தருளிய பெருவிழாவும், 19ஆம் நாள் தெப்பத் திருவிழாவும் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

20—3—72 முதல் 24—3—72 முடிய ஐந்து நாட்கள் திருமுறை மாநாடு கருத்தரங்கம், பட்டிமண்டபம் முதலியவற்றுடன் நிகழ்ந்தது. வேளூரில் பாடப்பெற்ற பல்வேறு இலக்கியங்களுள் அமைந்துகிடக்கும் இறையருளையும், இலக்கிய இன்பத்தையும் புலவர் பெருமக்கள் பலர் விரித்துரைத்தனர்.

23—3—72 வியாழக்கிழமை திருமுறைவிழாவும், தேவார வகுப்பு ஆண்டுவிழாவும் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றன. பண்ணிசைவாணர்களின் திருமுறைப் பாராயணத்தொடு யானை மேல் திருமுறைகள் திருவீதியுலாவாகக் கொண்டுவரப்பெற்றன. திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் பி.ஏ.,பி.எல். அவர்கள் ' வேளூரில் நாவரசர் ' என்ற பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றித் தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கிச்சிறப்பித்தார்கள். சைவப்பெருமக்கள் திருமுறை விழாக்களில் பங்குகொண்டு சிறப்பித்து உய்திபெற்றனர்கள்.

திருபுவனம்

திருபுவனம் ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி சமேத ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் உருத்திரபாதத் திருவிழா 19—3—72 முதல் 2—4—72 முடிய சமயச்சொற்பொழிவுகள், திருமுறைவிழா இவற்றுடன் மிகச் சிறப்பாக நிகழ்ந்தேறியது. 24—3—72 அன்று இடபவாகனக்காட்சியும், 26-3-72 திருக்கல்யாண உற்சவமும், 28-3-72 அன்றுத் திருத்தேர்த் திருவிழாவும் நிகழ்ந்தன.

21-3-72 முதல் 24-3-72 முடிய நாள்தோறும் மாலையில் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. கண்டராதித்தர், குந்தவைப் பிராட்டியார், முதல் இராசராசன், செம்பியன் மாதேவி, முதல் இராசேந்திரன், மங்கையர்க்கரசியார், திருபுவனச்சக்ரவர்த்தி, உலோகமாதேவி முதலிய சோழர்குலப் பெருமக்களின் சைவசமய ஈடுபாடுபற்றியும், அவர்தம் சிவத்தொண்டுகள் பற்றியும் புலவர் பெருமக்கள் பலரும் சிறப்புரையாற்றினர்.

24-3-72 வெள்ளிக்கிழமை திருமுறை விழாவும், தேவார வகுப்பு ஆண்டுவிழாவும் சிறப்பாக நடந்தேறின. கும்பகோணம் இந்து சமய அறநிலைய உதவி ஆணையர் திரு ஆர். அர்ச்சுனன் பி. ஏ. தலைமை ஏற்றார். பண்ணிசைவாணர்கள் திருமுறைப் பாராயணத்தொடு திருமுறைகள் யானைமீது திருவீதியுலாவாக எடுத்துவரப்பெற்றன. தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பெற்றன.

2—4—72 அன்று ஸ்ரீ சரபர் உற்சவம், காலையில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடனும் ஏகதின லட்சார்ச்சனையுடனும், மாலையில் வெள்ளிரதக் காட்சியுடனும் நிகழ்ந்தேறியது.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் 2-4-72 மாலை திருபுவனத்திற்கு எழுந்தருளி ஸ்ரீ சரபேஸ்வரர் உற்சவத்தில் கலந்துகொண்டு வழிபட்டு அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கியருளினார்கள். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி. கனம். எஸ். மகாராஜன் பி. ஏ., பி. எல். அவர்களும் சரபர் உற்சவத்தில் கலந்துகொண்டு வழிபாடாற்றினர்கள்.

அன்பர்கள் விழா நாட்களில் கண்டும் கேட்டும் திருவருள் பெற்றுச் சிறந்தனர்.

சீகாழி நகர மக்களின் குரு வழிபாடு

தருமையாதீனத்தில் 26ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளி அருளாட்சி ஏற்றுள்ள ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளை சீகாழி நகரமக்கள் வழி பட்டு வரவேற்று அருளாசி பெற்றனர்.

குருவழிபாடு :

3—4—72 திங்கள் காலை 9 மணி அளவில் விழாக்குழுவினர் தருமை வந்தனர். குரு வழிபாட்டு நிகழ்ச்சியில் அன்பர்கள் பலர் கலந்துகொண்டனர்.

காலை 10 மணி அளவில் ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்கு விசேஷ வழிபாடுகள் செய்விக்கப்பெற்றது. பூசைமடம் பூப் பந்தலினால் அலங்கரிக்கப்பெற்றிருந்தது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நி தானம் அவர்கள் அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்திப் பிரசாதம் வழங்கியருளினார்கள்.

ஸ்ரீ குருஞானசம்பந்தருக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்விக்கப்பெற்றன. ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி திருக் கோயில் வழிபாடு நடைபெற்றது.

அன்பர்கள் ஆறு ஊர்திகளில் பழங்கள் மாலை முதலிய பொருள்களுடன் வந்திருந்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர் களை முறைப்படி தரிசித்து வணங்கினர்.

பண்டாரக்கட்டில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஞான பீடத்தில் எழுந்தருளியிருந்து அன்பர்கள் எல்லோரையும் அமரச்செய்து சமய உண்மைகள் தத்துவ விளக்கம் முதலிய வற்றை எடுத்துக்கூறி சமயப்பணிக்கு அன்பர்கள் தங்களை ஆட்படுத்திக்கொள்ளவேண்டும் என்று அருளுரை வழங்கி திருநீற்றுப் பிரசாதம் வழங்கியருளினார்கள்.

நண்பகல் 2 மணிக்கு மாகேசுவரபூசை சிறப்பாக நடை பெற்றது. அன்பர்கள் அனைவரும் மகாசந்நிதானம் அவர்களை வழிபட்டு விடைபெற்று சீகாழிக்குச் சென்று வரவேற்பு விழாவில் ஈடுபட்டனர்.

வரவேற்பு விழா

சீகாழி நகரம் விழாக்கோலம் பூண்டிருந்தது. நகரெங்கும் வளைவுகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பெற்றிருந் தன. மகாசந்நிதானம் அவர்களை வரவேற்க திரளான மக்கள் குழுமியிருந்தனர்.

வடக்குவீதி திரு. அருணாசலமுதலியார் பங்களாவில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வந்து தங்குவதற்கு என மின் விளக்குகளினாலும், தோரணங்களாலும் மிகச் சிறப்பாக அலங் கரிக்கப்பெற்றிருந்தது.

மாலை 6-30 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர் கள் எழுந்தருளினார்கள். தெற்குவீதியில் உள்ள கட்டளை மடத்தின் திருமுன்பு விழாக்குழுவினரும் அன்பர்களும் வரவேற் றனர். திரு. சுப்பராய முதலியார் அவர்கள் மகாசந்நிதானம் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி வணங்கி வரவேற்றார் கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் முதலியார் அவர் களுக்குப் பொன்னாடை அணிவித்து அருளாசி வழங்கினார்கள்.

7 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பட்டணப்பிரவேசமாக எழுந்தருளினார்கள். சிறந்த நாதசுர இசை, வாணவேடிக்கை, முதலியவற்றுடன் பட்டணப்பிரவேசம் தொடங்கியது. கடல் அலைபோல மக்கள் வெள்ளம் வீதிகளில் உடன் வந்தது. வீடுகள் தோறும் பூரணகும்பங்கள் வைத்து அன்பர்கள் வரவேற்றனர். திருமுறை இசைவாணர்கள் பல்லக் கினைத் தொடர்ந்து திருப்பதிகங்களைப் பண்ணோன்ற பாடி வந்தனர்.

திரு அருணாசல முதலியார் பங்களாவில் மகாசந்நிதானம் அவர்களுக்குச் சிறந்த வரவேற்பளிக்கப்பட்டது. மலர்மஞ்சத்தில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை எழுந்தருளச்செய்து கொலு விருத்தி தூபதீப வழிபாடு, அருச்சனை முதலியவை செய்து திரு. அருணாசல முதலியார் குடும்பத்தினர் வணங்கி விபூதிப் பிரசாதம்பெற்று மகாசந்நிதானத்திற்குப் பொன்னாடைபோர்த்தி வணங்கினர். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமும் அருணாசலமுதலியாரின் கடவுள் பக்தியையும் அன்பினையும், சமயப் பற்றினையும், கண்டு பாராட்டி பொன்னாடை போர்த்தி அருளாசி கூறினார்கள். பிறகு பட்டணப்பிரவேசம் தொடர்ந்து மற்ற வீதிகளையும் கடந்து சுமார் 11 மணியளவில் கோயிலை வந்து அடைந்தது.

வரவேற்புக்கென ஞானசம்பந்தர் கோவிலின் வடக்குப் பிராகாரத்தில் ஒளிவிளக்கினாலும், மலர்களினாலும் அலங்கரிக்கப் பட்ட பந்தலில் திரளான மக்கள் முன்கூட்டியே வந்தமர்ந்திருந் தார்கள். வரவேற்புக் குழுவின் சார்பாகவும், பள்ளிக்கூடங்கள், வங்கிகள், நகரமக்கள், ஊராட்சி ஒன்றியம் முதலியவைகள் சார் பாக பல வரவேற்புப் பத்திரங்களும், பல்லோர் சார்பாக மலர் மாலைகளுமாக ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திற்கு அணிவிக்க எண்ணற்றவை இருந்தன. அவற்றை எல்லாம் திரு. முத்தையா பிள்ளை அவர்கள் வரிசைப்படுத்தி வைத்திருந்தார்கள்.

பிரமபுரீசர், தோணியப்பர், சட்டைநாதர், திருநிலைநாயகி, சம்பந்தர் முதலிய கடவுளர்க்கு விசேட அலங்காரங்கள் செய்யப் பெற்றிருந்தன. குருமகாசந்நிதானத்தில் சிறப்பாக அருச்சனை செய்து வழிபாடாற்றி பிறகு வரவேற்புப் பந்தலில் வந்தமர்ந் தார்கள்.

கடவுள்வணக்கத்திற்குப்பிறகு திரு. வைத்தியனாத முதலியார் அவர்கள் சந்நிதானத்திற்கு வரவேற்புரை கூறினார்கள். கட்டளை சுவாமிகள் வரவேற்பிதழ் வாசித்துக் கொடுத்தார்கள். விழாக் குழுவினர் சார்பாக திரு. சபாநாதன் அவர்கள் வரவேற்புரை வாசித்தளித்தார். பிறகு முதலியார் உயர்கல்விக்கூடங்களிலிருந் தும் இன்னும் பல்லோரிடமிருந்தும் வரவேற்பிதழ் கொடுக்கப் பட்டன. சிவாச்சாரியாரின் குழுவினரால் சந்நிதானத்திற்குப் பொன்னாடை போர்த்து வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டன. குருமகாசந்நிதானத்திற்குப் பலரும் மாலை அணிவித்தார்கள்; திரு. விஸ்வநாத முதலியார் பேசுகையில் வெளிநாட்டிலிருந்து வந்து சைவத்தின் மேன்மை உணர்ந்து கற்றுச்செல்லுகிறார்கள். நாம் கவனிக்காமல் இருக்கிறோம். சைவர்கள் சமயக்கருத்தினை அறிந்து ஆண்டவனைப் பணிந்து போற்றுவதால் நம் வாழ் நாளில் உயர்ந்து சிறப்படைவோம் என்று கூறினார். பிறகு சிதம் பரம் டாக்டர் அறப்பணிச்செல்வர் திரு. அரங்கசாமிப் பிள்ளை அவர்கள் கடவுளை வழிபடும் முறையாம் மார்க்கங்களை எடுத்துக் கூறி கடவுள் பக்தி வேண்டும் என்றெடுத்தியம்பினார். திரு. முத்தையா பிள்ளை அவர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் எழுந் தருளி வந்து அருளாசி வழங்கியதை மிகச் சிறப்பாக எடுத்துக் கூறினார்கள். ஊராட்சித் தலைவர் திரு. கோவிந்தசாமி அவர்களும், திரு சொக்கலிங்க முதலியார் அவர்களும் சிறப்புரை ஆற்றினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ‘ வேதநெறி தழைத் தோங்க மிகு சைவத்துறை விளங்க ’ என்ற ஞானசம்பந்தர்

புராணத்தின் முதற்பாட்டினை இசையுடன்பாடி அருளாசியைத் தொடங்கினார்கள். எமக்கு இவ்வூரில் சிறப்புச் செய்தது எல்லா விடத்தைவிட மிகச் சிறந்தது; ஏன் என்றால் எங்கள் குருமூர்த்திகளுக்குக் குருவாய் விளங்கியவர் ஞானசம்பந்தர். ஆதலால் இத்தலம் மிகச் சிறப்புடையது.

நாம் பல்லக்கில் உலா வரும்போது எம்முடைய சிந்தை எல்லாம் இறைவனுடைய திருவடியில் நிலைத்திருந்தன. நீங்கள் எல்லாம் வேறு எண்ணியிருந்திருப்பீர்கள் 'நாளுமின்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தருக்கு உலகவர்முன் தாளமீந்து அவர் பாடலுக்கிரங்கும் தன்மையாளனை' என்று கூறிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத் தலத்தைக் காலினால் மிதிக்கக்கூடாது என்றுகருதி எல்லையிலேயே இருந்து பதிகம்பாடிச் சென்றார் என்றால் இத்தலத்தின் சிறப்பினை நாம் சொல்லவும் வேண்டுமோ?

ஆண்டவன் அடியார்களை ஆட்கொள்ளும் திருமேனி மூன்றாகும். 1. குருவடிவம் - தோணியப்பர், 2. இலிங்கவடிவம் - பிரமபுரீசர், 3. சங்கம வடிவம் - சட்டைநாதர்.

மேலும், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், 'ஞானசம்பந்தருக்குக் குருவாகவந்து சிவஞானத்தின்னமுதை உமையம்மையால் ஊட்டும்படிச் செய்தார் பெருமான். எடுத்த திருப்பதிகத்தில் 'தோடுடைய செவியன்' என்று சுட்டிக்காட்டினார் சம்பந்தர். இலிங்கவடிவில் அருவுருவத் திருமேனியால் அகில உலகவரது மும்மலமறுத்து முத்திநிலையை அளிக்கும் தன்மையினையும் சங்கமத் திருமேனியால் தன் சக்தி முழுவதையும் காட்டி அருள்பாலிக்கும் தன்மையினையும் நாம் காண்கின்றோம். இந்த மூன்று நிலையினையும் சைவசமயத்தவர்கள் அறிந்து ஆண்டவனை வழிபாடு செய்யவேண்டும். நாமும் நல்ல நிலையடைந்து சிவப்பேற்றினை யடையலாம்' என்பனபோன்ற உயர் ஞானக் கருத்தினை எல்லாம் உவமை வாயிலாக மக்கள் மனங்கொள்ளுமாறு சிறப்புற ஒரு மணி நேரம் எடுத்துக் கூறி அருளாசி வழங்கினார்கள்.

இறுதியில் திரு. முத்தையாப் பிள்ளை நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது. உடனே ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் வரவேற்புக் குழுவினருக்கும் மற்றவர்களுக்கும் விபூதிப் பிரசாதம் உள்ள பையினையும் பழங்களையும் வழங்கினார்கள். அர்ச்சகர்களுக்கும், கோயில் சிப்பந்திகளுக்கும், மற்றவர்களுக்கும் சன்மானம் வழங்கிவிட்டு சரியாக 3 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தருமைக்கு எழுந்தளினார்கள்.

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

திரு. K. முத்துஜோதிடர்

(பரிதாபிஹு சித்திரைமீ 1உ முதல் 31உ முடிய)

(13—4—72 முதல் 13—5—72 முடிய)

சித்திரைமீ முதல் தேதி வியாழக்கிழமை அமாவாசையும் ரேவதி நக்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் உதயாதி 8 நாழி 20 விநாடிக்கு, விருஷப லக்கினத்தில் லோகரக்ஷகரான ஸ்ரீ சூரியபகவான் சைத்திர விஷு புண்ணியகால பலத்துடன் மேஷராசி பிரவேசம் செய்கிறார். ஷை ஜகஜ்ஜாதக பலன்,

சந் புதன்	சூரி	ல / சனி செ-சு	
	ஜகத்ஜாதகம்		கேது
ராகு			
குரு			

மேற்படி பரிதாபி வருஷத்திற்கு ராஜாகுரு. மந்திரியும் குரு இரு ஆதிபத்யத்துடனும் ஸ்ரீ குருபகவான் தனது தனுர் ராசியில் சஞ்சரிக்கும் காலத்தில் லோகரக்ஷகராக அமைந்தபடியால் ஷை வருஷம் உலகம் பூராவும் சுபிக்ஷகரமாக வும் ஸ்ரீமோதம் மும்மாரி மழை பெய்துகொண்டும், காலாகாலத்தில் பருவ மழைகள் தவறுமல் ஏராளமாய்ப் பெய்துகொண்டும்,

உலகம் பூராவிலும் பிரஜைகளுக்கு ஆஸ்தீக தர்ம, புத்தி விருத்தியும், துஷ்டர்கள் தாளுக ஒடுங்கிப்போதலும், சஸ்ய தான்யாதிகளுக்கு ஈதிபாதைகள் ஒன்றும் இல்லாமலும், கிருத த்ரேதாயுகாதிகள் போல் நமது பாரத பூமி பூராவும். தக்ஷிணபாரதம், காவேரி தீரம், தஞ்சை, திருச்சி ஜில்லா பூராவும் பரம சுகத்தையும், சுபிக்ஷத்தையும் அடையும்.

பிரவேச கால லக்னம் விருஷபமாகி அதில் சனி' செவ்வாய், சுக்ரனும் தனுதிபதி மீனத்தில் நீச ராசியில் அமைந்த படியால் ம்லேச்ச தேசங்களிலும், தீபாந்தரங்களில் இந்தியாவுக்கு வடக்கு, வடமேற்கு, தெற்கு, தென்கிழக்கு தேசங்களிலும், பாரத பூமியில் அதர்மத்தை அனுஷ்டிக்கும் பிரதேசங்களிலும் இயற்கைக் கோளாறுகளும், கலகங்களும், அமைதிக் குறைவும் காட்டும். சந்திர கேந்திர குருபலத்தால் புண்ய பூமிகள் மேலே குறிப்பிட்டபடி சுபிக்ஷத்தையும், சந்தோஷத்தையும் அடையும். கடவுள் காப்பார். சுபமுண்டாகும்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும், பூர்ணமாக சுபமான பலனேயே தரும். தூரதேசத்திலிருந்து அழைப்புப்பத்திரம் வரும். புதிதான முறையில் தொழில் உண்டாகும். குடும்பத்தில் மங்களமான காரியங்கள் நடக்கும் பரீக்ஷையில் ஜெயம் உண்டாகும். வியாதி குணமடையும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

விருஷபராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். அடிக்கடி தொழிலும், இடமும் மாறிக்கொண்டே இருக்கும். வீண் செலவுகளும் மனஸ்தாபங்களும் உண்டுபண்ணும் காரியங்கள் தவக்கத்துடன் சித்தியாகும். வரவு செலவு சமமாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

3. மிதுனம் – மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். எப்பொழுதும் கவலையைக் கொடுக்கும். செலவுகள் அதிகமாகும். ஸ்தாவர ஜெங்கம சொத்துக்களில் நஷ்டம் காட்டும்.

சகல காரியங்களிலும் விரோதமான மனப்பான்மையே உண்டாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபபலனையே தரும். வெகுகாலமாக எதிர்பார்த்து நடைபெறாத சுபகாரியங்கள் நடக்கும். மனம் சந்தோஷம் அடையும். நஷ்டமான பொருள் வந்துசேரும். ஸ்தாவர ஜெங்கம சொத்துக்களில் பலவித மான மாறுதல்கள் உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼.

சிம்மராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபபலனையே தரும். உத்தியோகத்தில் உயர்வு உண்டாகும்; உறவினர்களாலும் சிநேகிதர்களாலும் நன்மை ஏற்படும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும். வம்ச விருத்தி உண்டாகும். ஸ்திரமான சுகமான வாசம் ஏற்படும். வெள்ளி, சனி சுபமாகும்,

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½.

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். உத்தியோக விஷயங்களில் மாறுதல்களும், அதிகமான பொறுப்பும் கடமையும் உண்டாகும். மனம் நிம்மதியாக இருக்காது நினைப்பதெல்லாம் மாறுதலாகவே நடக்கும். ஆனாலும், இல்லற வாழ்க்கையில் மேன்மையும் சுகமும் சுபமும் கொடுக்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

7, துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். அதிக மான உழைப்பும் அலைச்சலும் ஏற்படும். ஜீவனம் ஓங்கும். எதிர்பாராத சில நன்மைகளும் கிடைக்கும். நஷ்டமான பொருள் வந்துசேரும். சகல காரியங்களும் தவக்கத்தோடு தெய்வபலத்தால் சாத்தியமாகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபமாக இருந்துகொண்டு இருக்கும். வம்சம்விருத்தியாகும். குடும்பத்தில் மங்கள காரியங்களால் செலவுகள் அதிகமாகும். படிப்பு விருதியாத் கும். புதிதான தொழில் பழக்கம் ஏற்படும் வியாழன், வெள்ளி சுபமாகும்.

9. தனுசு - மூலம் – பூராடம் – உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். புதிதாக ஆலய பிரதிஷ்டா பலன்களும், தானதர்மங்களும் அதிகமாகும். படிப்பில் உயர்வும் ஜீவனத்தில் உயர்வும் ஏற்படும். சுபகாரியங்களும் நடந்துகொண்டு இருக்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

10. மகரம்-உத்திராடம் $\frac{3}{4}$ – திருவோணம் – அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபமாகவே இருக்கும். ஆரோக்யம் உண்டுபண்ணும். ஜீவனம் ஓங்கும். அலைச்சல் அதிகமாகும், எதிர்பாராத சில நன்மைகளும் லாபங்களும் கிடைக்கும் குடும்பம் தழைத்து ஓங்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

11. கும்பம் – அவிட்டம் சதயம் $\frac{1}{2}$ –பூரட்டாதி–$\frac{3}{4}$,

கும்பராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். அடிக்கடி சஞ்சாரம் ஏற்படும். குடும்பத்தில் மேலோர் பெரியோர்களால் நன்மை உண்டாகும். அடிக்கடி சரீரத்தில் வியாதி உண்டாகி குணமடையும் புதன், வியாழன் சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி $\frac{1}{4}$ – உத்திரட்டாதி – ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் எப்பொழுதும் சுபமாகவே இருந்துகொண்டு சுபகாரியங்களும் எப்பொழுதும் நடந்துகொண்டே இருக்கும். குடும்பம், தனம், வித்யை, தொழில், ஜீவனம், ஆரோக்யம் எல்லாபாகங்களும் நன்மையாகவே இருந்துகொண்டு இருக்கும். கடவுள் கிருபையால் எல்லாம் நன்மையாகவே இருக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

சென்னை சமயப் பிரசார நிலையத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள்

13—4—72	தமிழ் வருஷப் பிறப்பு.
17—4—72	மங்கையர்க்கரசியார் குருபூசை.
19—4—72	விறன்மிண்ட நாயனர் குருபூசை.
26—4—72	உமாபதி சிவாசாரியார் குருபூசை.
27—4—72	இசைஞானியார் குருபூசை.
28—4—72	திருக்குறிப்புத்தொண்ட நாயனர் குருபூசை.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிகோயில்

மகோற்சவப் பத்திரிகை

பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் மீது வைத்த எல்லையிலாப் பெருங்கருணையினாலே, காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நிகழ் குறியாம் சிவலிங்கமாதி திருவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற தலங்கள் பலவற்றுள் இந்திரன், அகத்தியர், தருமன் ஆகியோர்களால் பூசிக்கப்பெற்றதும், காவிரி முதலிய தீர்த்தங்களால் சிறப்புற்றதும், வில்வாரண்யம் என்னும் திருநாமம் உற்றதும், ஆகிய சிறப்புக்களை உடையது தருமபுரம். ஸ்ரீ ஆலவாய்ச்சொக்கநாதப் பெருமான் திருவருளையும், கமலை ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகர் அருளையும் நிரம்பப் பெற்றுத் திகழ்ந்த ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தம் குருமூர்த்திகளது அருளாணையின்படி சைவ பரிபாலனம் என்றும் நிகழ்ந்து வருதற்குரிய ஞான பீடத்தை இங்கு நிறுவி வீற்றிருந்து ஜீவசமாதி கூடிய கோயிலே ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில். இதன்கண் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்கு நிகழும் பரிதாபி ஆண்டு வைகாசித்திங்கள் 11 ஆம் நாள் (24—5—72) புதன்கிழமை தொடங்கி மகோற்சவம் நடைபெறும்.

இந்நாட்களில் "திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும்-சமய விரிவுரை வகுப்பும்" நடைபெறும். சிவநேசச் செல்வர்கள் யாவரும் வந்திருந்து திருவிழாக்காட்சியைத் தினமும் தரிசித்தும், சொற்பொழிவுகளைக் கேட்டும் இன்புறுக.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்,
கார்பார்
சொக்கநாதத் தம்பிரான்.

தருமையாதீன
மடாலயம்
பரிதாபி-வைகாசி

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

சிவபெருமான்

சீர்கொண்ட ஆனந்தமாகி எங்கும்
செறிவாகிப் பரமாகித் திறம தாகி
ஏர்கொண்ட கருணைத்திரு வுருவமாகி
எழில்கொண்ட மலைமகளை இடத்திற் கொண்டோன்
கார்கொண்ட நிறங்கொண்ட முகுந்த னாதிக்
கடவுளர்வந் தடிபரவும் கடவுள் கொன்றைத்
தார்கொண்ட முடியனவன் அடியைத் தாழ்ந்து
தாழாத பெருங்கதியில் வாழா நிற்பாம்.

தருமையாதினக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணி அன்பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்குந் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

— சம்பந்த சரணாலயர்.

ஆதி பரமாசாரிய மூர்த்திகள் சரிதம்

பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில், சைவவேளாளர் மரபில், ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளை மீனாட்சியம்மை என்னும் பெற்றோர்க்கு அரும்பெறற் புதல்வர் ஒருவர் சோமவார சுப தினத்தில் தோன்றினர். பிள்ளைத் திருநாமம் ஞானசம்பந்தர் என்பது. இளமையிலேயே கல்வியில் குறைவில்லாது நிரம்பினர். பெற்றோர் தம் ஆன்மார்த்த மூர்த்தியாம் ஸ்ரீ சொக்கலிங்கத்தை வழிபட மதுரை சென்றபொழுது உடன்சென்ற ஞானசம்பந்தர் 'உண்மை அம்மை அப்பர் அங்கயற்கண்ணியும் ஆலவாய் அரனுமே' என்று சொல்லிப் பெற்றோருடன் ஊர் திரும்ப மறுத்து மதுரையிலேயே இருந்தார்.

நாள்தோறும் பொற்றாமரைத் தீர்த்தத்தில் மூழ்கிக் காலந்தோறும் ஸ்ரீ சொக்கநாதரை வழிபட்டு வந்தார். பொற்றாமரைத் தீர்த்தக் கரையில் சிவனடியார் பலர் நீராண்ட புரோதாயம் ஆடி, தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும் உடையவர்களாய் நாயகன் சேவடி தைவரும் சிந்தையுடன் அமர்ந்து நைந்துருகும் அன்போடு சிவபூஜை செய்தனர். அவ்வடியார்களது செயலில் ஒருநாள் ஞானசம்பந்தரது உள்ளம் ஈடுபட, முற்பிறப்பின் பூஜை உணர்வு அவருக்கு முகிழ்த்தெழுந்தது. ஆலவாய் அப்பனை, ஆன்மார்த்த மூர்த்தியாகப் பூஜிக்க அளவிலா ஆர்வங்கொண்டு அப்பெருமானை வேண்டினர். அப்பெருமான் அவரது கனவில் தோன்றி, 'முற்பிறப்பில் உன்னால் பூஜிக்கப்பெற்றுவந்த நாம், பூஜைப் பெட்டகத்துடன் பொற்றாமரைத் தீர்த்தத்துள் ஈசானத்திக்கில் இருக்கின்றோம்; மூழ்கிப்பெறுக' என்று அருளிச்செய்தார். ஞானசம்பந்தர் அங்ஙனமே மறுநாள் பொற்றாமரைத் தீர்த்தத்தில் மூழ்கி, ஆன்மார்த்த மூர்த்தியைப்பெற்று ஆனந்தபரவசம் உற்றார். பின், ஸ்ரீ சொக்கநாதர் சந்நிதியில் சென்று, 'பெருமானே, கண்ணுக்கினிய, பெருமானாய் என் கரத்தில் வந்த உன்னைப் பூஜிக்கும் நெறியை அருள்புரிய வேண்டும்' என்று வேண்டினர். அன்று இரவு பெருமான் கனவில் தோன்றி, 'திருவாரூர் ஞானப்பிரகாசனிடம் ஞானோபதேசமும், சிவபூஜையும்பெறுக' என்று பணித்தருளி, ஞானப்பிரகாசரது கனவிலும் சென்று, 'உன்னிடம் வருகின்ற நம் ஞானசம்பந்த

னுக்கு விதிப்படி சிவஞானோபதேசம் செய்து சிவபூஜையும் எழுந்தருளப்பண்ணி வைப்பாயாக' என்றுசொல்லி மறைந்தருளினர்.

திருவாரூரில் சித்தீச்சரத்தில் தென்முகக் கடவுள் திருமுன்பு சீடரின் வருகையைக் குருமூர்த்தி எதிர்நோக்கியிருந்தார். அருளாணையின்படி ஞானசம்பந்தர், கமலையை அடைந்து குருமூர்த்தியைக் கண்டதும், காந்தம் கண்ட இரும்புபோல் அவர் வசமாகி, சிவதீக்ஷையும்; சிவபூஜையும் எய்தினர். அவர் நாள்தோறும் ஸ்ரீ சொக்கலிங்கத்தைப் பூஜித்துப் பாடியதே சொக்கநாத வெண்பா. அவர் செய்த குருதோத்திரமே ஞானப்பிரகாசமாலை. ஒருநாள், ஞானப்பிரகாசர் பூங்கோயில் வழிபாட்டினை முடித்து மீள்கையில், கைவிளக்கெடுப்போன், ஆங்கு இல்லாமைகண்டு, ஞானசம்பந்தர் தாமே அப்பணியினை மேற்கொண்டு செல்ல, சிவத்தியான உள்ளத்துடன் செல்லும் குருமூர்த்திகள் இல்லத்தை அணுகியபொழுது, 'நிற்க, என்று சொல்லி உட்சென்றார். குருவாணை கடவாத ஞானசம்பந்தர் கைவிளக்கோடு வெளியிலே நின்றிருந்தார், மழை வந்தது, ஓர் அடியும் அப்புறம் பெயர்ந்திலர். மழை அவருக்கு மூன்றடி அப்பாற் சூழ்ந்தே பெய்தது. மறுநாட் காலையில் குருபத்தினியார் கண்டார். குருமூர்த்தியும் கேட்டுவந்து, 'நீர் குவலயத்திற்கு உண்மை விளக்கும் குருவாயினீர்' தனி இடத்தில் இருந்து உம்மை நாடி ஓடி வரும் காரணர்க்கு உண்மை வைத்து சமய பரிபாலனம் புரிக' என்றார். சீடர்,

"கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்டதுண்டோ ?
எனக்கும் உடற்கும் எனதிச்சையோ ? இணங் கார்புரத்தைச்
சினக்கும் கமலையுள் ஞானப்ர காச சிதம்பரஇன்று
உனக்கிச்சை எப்படி ? அப்படி ஆக உரைத்தருளே"

என்று வேண்டினர். அது கேட்டுக் குருமூர்த்திகள், 'தருமபுரம் செல்க' எனப் பணித்தருளினர்.

ஞானசம்பந்தர் அன்றுமுதல் குருஞானசம்பந்தராகித் தருமபுரத்தை அடைந்து சமய பரிபாலனம் புரிந்தார்; ஞான நூல்கள் பல அருளினர்; ஆனந்தபரவசர் முதலிய பலர் வழி ஞான பரம்பரையை உலகில் நிலவச் செய்தருளினர். அவரே தருமபுர ஆதீன ஞானபீடத்தில் ஆதி பரமாசாரிய மூர்த்திகள்.

ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி

திருக்கல்யாண வைபவக் காட்சியைத்,

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள்

தரிசித்தல்

(1971)

திருநாள் விபரம்

தமிழ் ஹு மீ உ	இங்கிலீஷ் ஹு மீ உ	கிழமை	திரு நாள்	உற்சவ விபரம்
10	23—5—72	செவ்வாய்		காலை கணபதி ஹோமம். ஹஸ்த நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் (மாலை மணி 8 to 9-30) தனுர் லக்னத்தில் அனுக்ஞை விக்னேசுவர பூஜை. வாஸ்துசாந்தி. மிருத்ஸங்கிரஹணம். அங்குரார்ப்பணம். ரக்ஷாபந்தனம்.
வைகாசீ 11	24—5—72	புதன்	1	சித்திரா நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி $7\frac{1}{2}$-நாழிகைக்குமேல் $8\frac{3}{4}$-நாழிகைக்குள் (காலை மணி 9 to 9-30) மிதுன லக்னத்தில் ஸ்ரீ ஞானாம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீஸ்வர சுவாமி மஹோத்ஸவ துவஜாரோகணம்.
12	25—5—72	வியாழன்	2	கற்பகவிருக்ஷக் காட்சி.
13	26—5—72	வெள்ளி	3	பூதம், பூதகி, இடும்ப வாகனக் காட்சி.

14	27—5—72	சனி		நந்தி, காமதேனு, குதிரைவாகனக் காட்சி.
15	28—5—72	ஞாயிறு	5	சகோபுர ரிஷப வாகனக் காட்சி.
16	29—5—72	திங்கள்	6	யானை, அன்னம், ஆட்டுக்கடா வாகனக் காட்சி.
ஸ்ரீபரிதாபி 17	30—5—72	செவ்வாய்	7	இரவு மணி 7-30க்கு மேல் 9-30க்குள் தனுர் லக்னத்தில் திருக்கல்யாண வைபவம்; புஷ்ப விமானம், வெள்ளிரதக் காட்சி.
18	31—5—72	புதன்	8	குதிரை, கிளி, யானை வாகனக் காட்சி.
19	1—6—72	வியாழன்	9	காலை (மணி 9 to 10-30) கடக லக்னத்தில் மஹா ரதாரோகணம்; திருத்தேர்.
20	2—6—72	வெள்ளி	10	காலை ஸ்ரீ சபாநாயகர் தீர்த்தம் கொடுத்தருளல். பிறகு பஞ்சமூர்த்திகளும் ரிஷபாரூடராய் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளல். இரவு துவஜாவரோஹணம்.
21	3—6—72	சனி		மௌன உற்சவம்.
22	4—6—72	ஞாயிறு		சண்டேசுவரர் உற்சவம்.

உ

குருபாதம்

தருமையாதீனம்

கோடைக்கால சமயப் பயிற்சி வகுப்பு!

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு!

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத் திருமடத்தில் ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவை ஒட்டி 22—5—72 முதல், 3—6—72 முடிய கோடைக்கால சமயப் பயிற்சி வகுப்பும், திருநெறியதெய்வத்தமிழ் மாநாடும் சிறப்பாக நடைபெற உள்ளது.

சமயப் பயிற்சி வகுப்பு காலை மணி 10 முதல் 12 முடியவும், மாலை மணி 4 முதல் 5 முடியவும் நாடோறும் நடைபெறும். சைவ சித்தாந்தம், அத்வைதம், வைணவம், கிறித்துவம், இஸ்லாமியம் முதலிய சமயத் தத்துவங்களும், வேதம், ஆகமம், அறநெறி இலக்கியங்களும், அவ்வத்துறையில் சிறப்புமிக்க அறிஞர்களால் வகுப்பு முறையில் விரிவுரையாக நிகழ்த்தப்பெறும்.

கலந்துகொள்ள விரும்புவோர்க்கு உணவும், தங்குதற்கு வசதியும் செய்துதரப்படும்.

பள்ளியிறுதி வகுப்புக்குமேல் பயின்ற செகண்டரி ஆசிரியர்கள், புலவர் பட்டம் பெற்றவர்கள், உயர் கல்வி பெற்றவர்கள் இதில் கலந்துகொள்ளலாம். பயிற்சிபெற விரும்புவோர் தங்கள் பெயர் தகுதி, அலுவல் நிலை முதலியனபற்றித் தெளிவாக எழுதுவதோடு, கீழ்க்கண்ட முகவரிக்கு 18—5—72 க்குள் விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின்
உத்தரவுப்படி,

வித்துவான். இராமலிங்கத் தம்பிரான்.

தொடர்புக்கு :-
மேலாளர்
தருமையாதீனம்,
மாயூரம்.
11—5—1972.

உ

குருபாதம்

சமய விரிவுரை வகுப்பும்

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும்

22—5—'72 திங்கட்கிழமை

சமய விரிவுரை வகுப்பு

காலை மணி 10

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

ஆசியுரை

தொடக்கவுரை :

புதுவை மாநில ஆளுநர்

மேதகு, பி. டி. ஜட்டி, B. A., LL. B.

மாலை மணி 4 to 5

சிவாகமவித்துவான்

சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

தலைமையாசிரியர், தருமையாதீன வேத சிவாகம பாடசாலை.

" சிவாகமங்கள் "

மாலை மணி 6

திருக்கடவூர் திருக்கோயில் வழிபாடும் சமய விரிவுரைக் கூட்டமும்

23—5—72 செவ்வாய்க்கிழமை

சமய விரிவுரை வகுப்பு

காலை மணி 10 to 11

தருமையாதீனப்புலவர், சித்தாந்தக்கலைமணி

மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

" கடவுள் உண்மை "

காலை மணி 11 to 12

சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

" சிவாகம பத்ததிகள் "

மாலை மணி 4 to 5

வேதாந்த வியாகரண சிரோமணி,

கீரனூர், பிர்மஸ்ரீ. இராகவசாஸ்திரிகள்

" உபநிடதங்கள் "

மாலை மணி 6

வேளூர், சீகாழி திருக்கோயில் வழிபாடும் சமய விரிவுரைக் கூட்டமும்

24—5—72 புதன்கிழமை] [முதல் திருநாள்

சமய விரிவுரை வகுப்பு

காலை மணி 10 to 11

மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

" கடவுள் இயல்பு "

காலை மணி 11 to 12

கீரனூர், பிர்மஸ்ரீ, இராகவ சாஸ்திரிகள்

" சைவ புராணங்கள் "

மாலை மணி 4 to 5

திரு. வி. சுவாமிநாத ஆத்திரேயர்

தஞ்சை.

" காணுபத்தியம் "

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

மாலை மணி 6-30

வரவேற்புரை :

வித்துவான், ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
கட்டளை விசாரணை, வேளூர் தேவஸ்தானம்.

தொடக்கவுரை :

மாண்புமிகு, திரு. எம். கண்ணப்பன்
இந்துசமய அறநிலைய அமைச்சர், தமிழ்நாடு அரசு.

சிறப்புரை :

மாண்புமிகு, திரு. எஸ். மகாராஜன், B. A., B. L.,
உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

விரிவுரை :

கும்பகோணம், பெரியமடம், மகாசந்நிதானம்,
ஸ்ரீமத், சாந்ததேவ சாரங்கதேசிகேந்திர சுவாமிகள்

" வீரசைவம் "

சித்தாந்தப் புலவர்மணி
புலவர், திரு. ந.ரா. முருகவேள் M. A., M. O. L.,
ஆசிரியர், 'திருக்கோயில்' சென்னை,

" சங்கநூல்களில் சமயம் "

இன்னிசைக் கதை

தஞ்சை சகோதரிகள் குழுவினர்

" திருநீலகண்டர் "

25—5—72 வியாழக்கிழமை] [இரண்டாம் திருநாள்

சமய விரிவுரை வகுப்பு

காலை மணி 10 to 11

மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

" உலகம் உண்மை "

காலை மணி 11 to 12

டாக்டர், திரு. சோ. ந. கந்தசாமி M. A., M. Litt. Phd.
தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

" தொல்காப்பியத்தில் மொழியியல்-வாழ்வியல் "

மாலை மணி 4 to 5

வாகீச கலாநிதி, செந்தமிழ்ச்செல்வர்,
திரு. கி. வா. ஜகந்நாதன் M. A.,
ஆசிரியர், 'கலைமகள்' சென்னை.

" பதினெண்கீழ்க் கணக்கு "

திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு

மாலை 6-30

வரவேற்புரை :

வித்துவான் ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்
கட்டளை விசாரணை, திருநள்ளாறு தேவஸ்தானம்

சிறப்புரை :-

வித்துவான், ஸ்ரீமத். இராமசாமி அடிகளார்,
ஸ்ரீ சாந்தலிங்க அடிகளார் திருமடம், பேரூர்.

விரிவுரை :

டாக்டர். திரு. சோ. ந. கந்தசாமி M. A , M. Litt. Phd.,
தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

" பௌத்தம் "

வாகீசகலாநிதி, செந்தமிழ்ச்செல்வர்,
திரு. கி. வா. ஜகந்நாதன் M A.
ஆசிரியர், கலைமகள் சென்னை.

" புராணங்களும், இக்காலக்கதைகளும் "

பொம்மலாட்டம்

ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடக சபா
மாயூரம்.

" வள்ளித் திருமணம் "

26—5—72 வெள்ளிக்கிழமை] **[மூன்றும் திருநாள்**

சமய விரிவுரை வகுப்பு

காலை 10 to 11

மகாவித்துவான், திரு. சி, அருணைவடிவேல் முதலியார்

" உலகின் இயல்பு "

காலை 11 to 12

திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர்.
வித்துவான். திரு. க. வெள்ளைவாரணனுர்
துணைப்பேராசிரியர், தமிழ் ஆராய்ச்சித்துறை
அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

" திருமுறை ஆசிரியர்கள் "

மாலை 4 to 5

வித்துவான், திரு. க. வெள்ளைவாரணனுர்

" திருமுறைச் சிறப்பு "

திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு

மாலை 6-30 மணி

வரவேற்புரை :

வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
தருமையாதீன சமயப்பிரசார நிலையம், சென்னை.

சிறப்புரை :-

வித்துவான், ஸ்ரீமத். சுந்தர சுவாமிகள்,
கௌமார மடம், சிரவணபுரம், கோவை.

விரிவுரை :

ஜீவபந்து திரு. ஸ்ரீபால்
சென்னை.

" ஜைனம் "

திரு இரா, நாகசாமி M. A.,
தொல்பொருள் ஆராய்ச்சித்துறை, சென்னை.

" கல்வெட்டுக்களில் சமயம் "

திருமுறை இசையரங்கு

தேவார இசைமணி, சீர்காழி, திரு. S. திருஞானசம்பந்தம்,
தேவார இசைமணி, திருச்சி, திரு. S. முத்துக்கந்தன் குழுவினர்.

27—5—72 சனிக்கிழமை] **[நாலாந் திருநாள்**

சமயவிரிவுரை வகுப்பு

காலை மணி 10 to 11

மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

"உயிருண்மை ; உயிரியல்பு"

" " 11 to 12

திரு. இரா. இராதாகிருஷ்ணன், M. A.

பேராசிரியர், தேசியக் கல்லூரி, திருச்சி.

"சிவபோகசாரம்"

மாலை 4 to 5

திரு. பி. இராமதாஸ அய்யர்

ஆனந்ததாண்டவபுரம்.

"சாக்தம்"

திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு

மாலை 6-30 மணி

சிறப்புரை :-

அறப்பணிச்செல்வர்,

டாக்டர். திரு. K. அரங்கசாமிப் பிள்ளை,

சிதம்பரம்.

விரிவுரை :

மௌலவி, திரு. A. அப்துல்ஜபார்

பேராசிரியர், M. M. H. அராபிக் கல்லூரி. நீடூர்.

"இஸ்லாம்"

திரு. இரா. இராதாகிருஷ்ணன், M. A.,

"திருவிளையாடற்புராண தத்துவம்"

நாட்டிய அரங்கு

லயஞானக் கலையரசி

குமாரி K. லலிதா குழுவினர்

கும்பகோணம்.

"ஆறுபடை வீடுகள்"

28—5—72 ஞாயிற்றுக்கிழமை]   [ஐந்தாம் திருநாள்

சமயவிரிவுரை வகுப்பு

காலை 10 to 11

மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

"சாதனங்கள்"

" " 11 to 12

செந்தமிழ் வித்தகர்

திரு. அ. ச. ஞானசம்பந்தம் M. A.,

தமிழ்த்துறைத் தலைவர், மதுரைப் பல்கலைக் கழகம்.

"பிற்காலச் சமய இலக்கியங்கள்"

மாலை 4 to 5

திரு. இராமலிங்க தீட்சிதர் M. A., M. Lit ,

"கௌமாரம்"

திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு

மாலை 6-30 மணி

சிறப்புரை :

திரு. V. S. கோதண்டபாணி B. A., B. L.

இந்துசமய அறநிலையத்துறைத் துணை ஆணையர்

தஞ்சை.

விரிவுரை :

திரு. கீ. இராமலிங்கனர், M. A.,

சென்னை.

"சமய நோன்புகள்"

செந்தமிழ்வித்தகர்,

திரு. அ. ச. ஞானசம்பந்தம் M. A.,

"பெரியபுராணம் வாழ்வியல் நூல்"

திருமுறை இசையரங்கு

சங்கீதபூஷணம், தருமபுரம் திரு. P. சுவாமிநாதன்,

சங்கீதபூஷணம், சென்னை திரு. S, ஞானப்பிரகாசம் குழுவினர்.

29—5—72 திங்கட்கிழமை] [ஆறும் திருநாள்

சமய விரிவுரை வகுப்பு

காலை 10 to 11

மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

" பயன் "

„ 11 to 12

திரு. மு. அருணாசலம் பிள்ளை, M. A.,

திருச்சிற்றம்பலம்.

" சைவ சாத்திரங்கள் "

மாலை 4 to 5

சிரோமணி, வித்துவான்

திரு. வி. சபேசன்

பேராசிரியர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி

" சாத்திர ஆசிரியர்கள் "

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

மாலை மணி 6–30

சிறப்புரை ;

திரு. மு. அருணாசலம் பிள்ளை, M. A ,

திருச்சிற்றம்பலம்.

விரிவுரை :

ரெவரெண்ட் ஃபாதர் திரு. இக்னேஷியஸ் ஹிருதயம்

சென்னை.

" கிறித்துவம் "

திரு, N. R. கிரிதாரி பிரசாத் B. A., B. L.,

கோவை.

" பகவத் கீதை "

இன்னிசையரங்கு

சங்கீதவல்லி

திருமதி. T. V. இரத்தினம் குழுவினர்

சென்னை.

30—5—72 செவ்வாய்க்கிழமை] [ஏழாம் திருநாள்

சமய விரிவுரை வகுப்பு

காலை மணி 10 to 11

அக்னிஹோத்ரம் ஸ்ரீ இராமாநுஜ தாதாச்சாரியார்
கும்பகோணம்.

" வேதம் "

காலை மணி 11 to 12

தருமையாதீன வித்துவான், கீர்த்தன குலசேகர, பாகவதர்
எம்பார், ஸ்ரீமத். விஜயராகவாச்சாரியார்
ஸ்ரீ ரங்கம்.

" வைணவ புராணங்கள் "

மாலை மணி 4 to 5

செஞ்சொற்கொண்டல்
வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling.
தமிழ் விரிவுரையாளர், அ. வ. அ. கல்லூரி, மன்னன்பந்தல்.

" சாங்கியம் "

திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு

மாலை மணி 6-30

சிறப்புரை :

திரு. T. N. சிங்காரவேலு B. A., B. L.,
மாவட்ட நீதிபதி, கடலூர்.

விரிவுரை :

அக்னிஹோத்ரம் ஸ்ரீ இராமாநுஜ தாதாச்சாரியார்
கும்பகோணம்.

" வைணவ சித்தாந்தம் "

புலவர். திரு கீரன்
லால்குடி.

" கந்தபுராணத் தத்துவம் "

இன்னிசைக் கதை

தருமையாதீன வித்துவான், கீர்த்தனகுலசேகர, பாகவதர்
எம்பார், ஸ்ரீமத். விஜயராகவாச்சாரியார் குழுவினர்
ஸ்ரீரங்கம்.

" மீனாட்சி திருமணம் "

31—5—72 புதன்கிழமை] [எட்டாந் திருநாள்

சமய விரிவுரை வகுப்பு

காலை 10 to 11

உபன்யாஸ ரத்நகர
திரு. M. இராமராவ் B. A., L. T.,
கும்பகோணம்.

" த்வைதம் "

காலை 11 to 12

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்.
திரு. ச. தண்டபாணி தேசிகர்
திருக்குறள் ஆராய்ச்சிப் பிரிவு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

" யோகமதம் "

மாலை 4 to 5

திருநெறிச் செம்மல், நல்லிசைப் புலவர்
வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர்
முதல்வர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி

" நித்தியகன்மநெறி "

திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு

மாலை 6-30 மணி

சிறப்புரை :

குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனம் மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய
சுவாமிகள் M. L. C.,
(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)
மாண்புமிகு, திரு. க. அன்பழகன் M. A., B. T.,
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தமிழ்நாடு அரசு.

விரிவுரை :

திரு. சோ. சத்தியசீலன் M. A.
தமிழ் விரிவுரையாளர், தேசியக் கல்லூரி, திருச்சி.

" வள்ளுவர் கண்ட மெய்ந்நெறி "

புலவர். திரு. கீரன்,
லால்குடி.

" வள்ளலார் கண்ட சமயம் "

பொம்மலாட்டம்

ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடக சபா
மாயூரம்.

" பக்த அரிச்சந்திரா "

1—6—72 வியாழக்கிழமை]   [ஒன்பதாந் திருநாள்

சமய விரிவுரை வகுப்பு

காலை மணி 10 to 11

திரு. C. S. வேங்கடேஸ்வரன் M. A.,
வடமொழிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
' அத்வைதம் "

காலை மணி 11 to 12

திரு. வை. இரத்தினசபாபதி M. A.,
தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
" மேனாட்டுத்தத்துவங்கள் "

மாலை மணி 4 to 5

புலவர், திரு. இரா. செல்வக்கணபதி
பேராசிரியர், தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி.
" சொக்கநாதவெண்பா "

திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு

மாலை மணி 6–30

சிறப்புரை :

மாண்புமிகு. R. சதாசிவம் B. A., M. L.,
உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

விரிவுரை :

திரு. வை. இரத்தினசபாபதி M. A.,
" கீழைநாட்டுத் தத்துவங்கள் "

திரு ஔவை து. நடராஜன் M. A. M. Litt.,
சென்னை.
" ஆசாரக்கோவை "

இன்னிசைக் கதை

குமாரி கௌரி குழுவினர்
சென்னை.
" குருஞானசம்பந்தர் "

2—6—72 வெள்ளிக்கிழமை] [பத்தாந் திருநாள்

சமய விரிவுரை வகுப்பு

காலை மணி 8–00

அமுதமொழிக்கொண்டல்,
திருமுருக. கிருபானந்தவாரியார்
சென்னை.

"திருஞானசம்பந்தரும், குருஞானசம்பந்தரும்"

குருபூஜை விழா

காலை மணி 9-30

ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் வழிபாடு

விழா மலர் :
பிராசாத மும்மணிகள்

காலை மணி 10 to 11

ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் வழிபாடு

(ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருக்கோயில்)

மாலை மணி 4–00

சிறப்புரை :

மாண்புமிகு. திரு. N. கிருஷ்ணசாமி ரெட்டியார் B. A., B. L.
உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

விரிவுரை :

திருக்குறள்வேள்
திரு. ஜி. வரதராசப் பிள்ளை B, A.
திருச்சி.

"திருமூலர்"

மாலை மணி 6–00

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

காவிரித் திருமஞ்சனத்திற்கும் குருமூர்த்த வழிபாட்டிற்கும் எழுந்தருளல்.

3—6—72 சனிக்கிழமை] [பட்டணப்பிரவேசத் திருநாள்

காலை மணி 8-30

திரு. பு. ர. சுவாமிநாதன் B. A., L. T.
சிதம்பரம்.

" ஞானப்பிரகாச மாலை "

காலை மணி 10-00

ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் வழிபாடு

நண்பகல்

மாகேசுவர பூஜை

சமய விரிவுரை வகுப்பு நிறைவு

மாலை மணி 6-00

சிறப்புரை :

மாண்புமிகு. திரு. மகராஜன் M. A., B. L.
உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

திரு. மீ. ப. சோமசுந்தரம்
சென்னை,

" ஆதீனத் திருப்பணிகள் "

மாலை மணி 7-00

இன்னிசை

தருமையாதீன இசைப்புலவர், இசையரசு
திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் குழுவினர்

இரவு மணி 10-00

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

பட்டணப்பிரவேசக் காட்சி